Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்


பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி–05 | 20–12–2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை–305

உங்கள் நிறுவனங்களின்
உள்ளக தொலைபேசி
இணைப்புக்களுக்கு...

கிளிநொச்சியில்
அதிக நிறுவனங்களுக்கு
உள்ளகத் தொலைபேசி
இணைப்புக்களை ஏற்படுத்தியவர்கள்.

நொதேன் ரெக்னோலஜி
பிறைவேட் லிமிட்டட்
இல:52, 2ஆம்குறுக்குத்தெரு, வவுனியா.
தொலைபேசி : 024-2221649.
இல: 20, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி : 021-2225653(சி-13518)




பேரணி மீது தாக்குதல் நடத்த ஓடும் படையினரையும் தாக்குதலில் காயமடைந்த சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் மாணவ தலைவரையும் படங்களில் காணலாம் (படங்கள் :- ஆன்சிலீன்,41)

## - யாழ். பல்கலை. மாணவர் நடாத்திய -

# அமைதிப்பேரணி மீது இராணுவம் கோரத்தனமான தாக்குதல்!

## 50இற்கு மேற்பட்டவர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

*யாழ். குடாநாட்டில் பொதுமக்கள் மீதும், மாணவர்கள் மீதும் சிறிலங்காப்படையினர் நடத்திவரும் அராஜகங்களைக்கண்டித்து நேற்று யாழ். பல்கலைக்கழகமாணவர்கள் நடத்திய அமைதிப்பேரணியினை தடுத்து நிறுத்தி படையினர் மேற்கொண்ட கோரத்தனமான தாக்குதலில் யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர், மாணவர்கள் உட்பட 50இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.*

யாழ். குடாநாட்டில் நிலை கொண்டுள்ள படையினர் அப்பாவிப் பொதுமக்கள் மீதும் மாணவர்கள் மீதும் புரிந்துவரும் அராஜகங்களுக்கான கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்விச் சமூகத்தைச்சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் திரண்டு நேற்று முற்பகல் பத்து மணியளவில் அமைதிப்பேரணி ஒன்றை நடத்தினர்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர் தாக்குதலில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய பேரணி மீது படையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதலில் பேராசிரியர் ஒருவரும், சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரும் பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் காயமடைந்தனர். இச்சம்பவத்தில் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் என்.பேரின்பநாதன் (வயது-55) உட்பட ஐவர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவச்சந்திரன் (வயது-61) முகாமைத்துவ பிரிவு மாணவர் செயலாளர் இ.செந்தில்குமார் (வயது-22) மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தலைவர் காண்டீபன் (வயது-26) ஆகியோர் தாக்குதலில் படுகாயமடைந்து யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## படையினரின் தாக்குதல்களுக்கு பொது அமைப்புக்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் இளம் பெண் படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுக்கொலை செய்தமை மற்றும் யாழ். பல்கலைக்கழகசமூகம் மீது நேற்று நடத்தப்பட்ட சிறிலங்காப்படைகளின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்சம்பவங்கள் தொடர்பாக பல்வேறு பொது அமைப்புக்களும் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், மன்னார் மண்மீட்கும் மக்கள் படை, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் உட்பட பல்வேறு பொது அமைப்புக்களும் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

## அரசாங்கமும் இராணுவத்தளபதியுமே யாழ். வன்முறைகளுக்கு பொறுப்பு

### - துணைவேந்தர் மோகனதாஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினரால் கட்டவிழ்த்துவிடப்பட்ட காட்டுமிராண்டித்தனமான வன்முறைகளுக்கு சிறிலங்காவின் புதிய அரசாங்கமும் புதிய இராணுவத் தளபதியுமே பொறுப்பு என்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துணைவேந்தர் சி.மோகனதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மண்டபத்தில் நேற்றுமாலை 5.00 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

இன்றைய நாள் கறைபடிந்த நாளாக அமைந்துள்ளது. அகிம்சை வழியாக மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தைத் துப்பாக்கியால் அடக்கியமை கடும் கண்டனத்துக்குரியது.

மிகவும் ஒரு கட்டுப்பாட்டுடன் முதலில் விரிவுரையாளர்கள், மாணவர் ஒன்றியத்தலைவர், மாணவர்கள் என ஒழுங்காகவும் உணர்வுடனும் நடந்து கொண்டவர்களைத் தாக்கியுள்ளனர்.

மாணவர்கள் கல்வீசவும் இல்லை தடிகளால் எறியவும் இல்லை. மிகவும் அமைதியாக நடைபெற்ற போராட்டத்தைத் துப்பாக்கியால் தாக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை. துணைவேந்தர் கண்காணிப்புக்குழுவுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். இல் இடம்பெற்றுவரும் படையினரின் அத்துமீறிய செயற்பாட்டைக் கண்டித்து பல்கலைக்கழக சமூகத்தால் நேற்று நடத்தப்பட்ட பேரணி மீது படையினர் தாக்குதல் நடத்தினர். இதற்கு ஆட்சேபம் தெரிவித்து பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையிலானவர்கள் கண்காணிப்புக் குழுவைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.நேற்றுப் பிற்பகல் 1.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)



(படம்:- செல்வா)

## படையினரின் தாக்குதலில் 4 ஊடகவியலாளர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சமூகம் நடத்திய பேரணி மீது படையினர் மேற்கொண்ட தாக்குதல்களில் ஊடகவியலாளர்கள் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவங்கள் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்றிருந்த ஊடகவியலாளர்களே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தம்மை ஊடகவியலாளர்கள் என உறுதிப்படுத்தும் வகையில் அரச தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைக

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதம் ஏந்திப் போராடுவதென பல்கலை. மாணவர் சமூகம் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் மற்றும் வன்முறைகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப்போராடி தமது உரிமைகளை வென்றெடுப்பது என யாழ்பல்கலைக்கழக மாணவ சமூகம் முடிவு எடுத்துள்ளதுடன் முதலில் 500 மாணவர்கள் போர்ப்பயிற்சி பெற முன் வந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை யாழ். பரமேஸ் வராச் சந்தியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக்குழு அலுவலகம் நோக்கி மனுக்கையளிக்கச் சென்ற மாணவ சமூகத்தினர் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதை அடுத்து பல்கலைக்கழகத்தில் மாணவ சமூகத்தினர் அவசர ஒன்று கூடல் ஒன்றை நடத்தி இனிமேல் மாணவர்கள் ஆயுதப்பயிற்சி பெற்று இராணுவத்தினருக்கு எதிராக உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பது எனத் தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.

**வரி விளம்பரம்**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

இணையத்தளங்களை உருவாக்கக் கூடிய உயர்கற்கை நெறி

**Dreamweaver MX**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

தொடர்புகட்கு:

வின்நெற் கணனி பயிற்சி நிலையம் டிப்போவீதி, கிளிநொச்சி (சி.13074)

**ஜோன் கல்வி நிலைய புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

2006ஆம் ஆண்டிற்கான தரம்3 தொடக்கம் தரம் 11 வரையான புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. காலம்- 20.12.2005 செவ்வாய்க்கிழமை (இன்று)பி.ப 3மணி நிர்வாகி புதுக் குடியிருப்பு (6956)

**கிளி-சீமெந்துக்கல் ஆக்கம்**

வேலித்தூண்கள், சீமெந்துக்கல், பூக்கல்வகை, பூச்சாடிகள், அழகுத் தூண்கள் என்பன நியாய விலைக்கு விற்பனைக்கு உண்டு. வைத்திய சாலை பின் ,கிளிநொச்சி. (7154)


# மக்கள் அவதி

(மாங்குளம்)

மாங்குளம் சந்திப்பகுதியில் பேருந்து தரிப்பு நிலையம் இன்மையால் பிரயாணிகள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

ஏ-9பிரதான வீதியில் அமைந்துள்ள மாங்குளம் சந்திப்பகுதி ஒட்டுசுட்டானிலிருந்து பெரும் வீதியும், மல்லாவியிலிருந்து பெரும் வீதியும் சந்திக்கும் பிரதான மையமாகவுள்ள நிலையில் அதிக பிரயாணிகள் பேருந்துகளை எதிர்பார்த்துக்காத்திருக்கின்ற இம் மாங்குளம் சந்திப்பகுதியில் ஒரு பேருந்துத்தரிப்பு நிலையம் இன்மையால் இம்மழை காலத்தில் பிரயாணிகள் மழையில் நனைந்தபடி பேருந்துகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையே காணப்படுகிறது. (து)

# கணனியற் கல்லூரி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

ஏசியன் கல்வி நிறுவனத்தின் ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கணனியற் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் கணனிப் பயிற்சியினை நிறைவுசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் கணனியற் கல்லூரி இணைப்பாளர் திருமதி.மாருகா தலைமையில் தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்தில் நடைபெற்றது.

வரவேற்புரையினை கணனியற் கல்லூரி மாணவி செல்வி சுகந்தினி



நிகழ்த்தினார். மங்கல விளக்கினை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, கொழும்பு தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்ட இணைப்பாளர் சந்துருபரராஜசிங்கம் ,யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி சூசைநாதன், தமிழர் புனர்வாழ்வுக்கழக கல்வித்திட்ட பணிப்பாளர் ராஜகோபால் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

பின்னர் அகவணக்கத்தைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றன. சிறப்புரையினை கே.பி. றெஜி,சூசைநாதன், ,ராஜகோபால் ஆகியோர் நிகழ்த்தியதைத் தொடர்ந்து மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## ௦௬ ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | வீரச்சாவு |
|---|---|---|
| 1976 - 04 - 04 |  | 1999 - 12 - 20 |

## கப்டன் சிறீகாந்தன்

**பரமலிங்கம் விக்கினேஸ்வரன்**

**(விசேட வேவுப் படையணி)**

தானைத்தலைவர் வழி நின்று
தளராத உறுதியுடன்
தாயகத்திற்காய் உயிர்கொடுத்தாய்
தம்பி சிறிகாந்தா
ஆண்டு ஆறானாலும்
அழியாது உன் நினைவு

647/7
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

(7157)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# CARE INTERNATIONAL SRILANKA

**CARE International Sri Lanka is an INGO actively involved in addressing issues of social marginalisation throughout the country. It implements a diverse portfolio of programmes in Peace Building & Reconciliation, Capacity Building, Gender Based Violence, Micro Finance, Agricultural Development, Business Development, and Water Resources Management. It has the following vacancies in the Silent Tsunami Project and Uprooted People's Water & Sanitation, Agriculture and Resources Development Project (UPWARD).**

**We seek the services of qualified, proactive, and self-motivated individuals to join our Team:**

**TEAM LEADERS - Kilinochchi (01)/ Mullaitivu (02)/Trincomalee (01)**

The Team Leaders will be responsible for the overall planning and implementation of the Project as well as the monitoring of the project activities. They will be heading a group of programme and programme support staff to achieve the results of the project in their respective Districts, in close co-ordination among themselves, Co-ordinators & Project Officers to ensure that the interventions promoted under different sectors are in line within CARE's programming principles. The Team Leaders are accountable for project impact as laid out in the project logical framework, and are responsible for preparing joint annual project implementation plan. They will ensure that the human and financial resources of the project are effectively managed.

Leadership skills, Good communication skills, excellent command of spoken and written English, ability to work under pressure, decision making skills, and team building skills are essential.

Applicants should possess a Degree in Agriculture, Natural Resource Management, Social Sciences, or Management with 05 years' experience in a similar capacity. While NGO experience will be advantageous it is not essential. Proficiency in Sinhala and/or Tamil is desirable. The positions are based in above locations with field travel.

**PROJECT CO-ORDINATOR - MEDIA & INFORMATION - Kilinochchi**

The Media & Information Coordinator is responsible for overall development and management of the Advocacy/networking and Media/Communication components of the Programme. Under the direct guidance of the Project Director, he/she will be playing a lead role in defining the Project's Advocacy/ Networking/Media/Communication/Information objectives and operational strategies, as well as achieving the standards set for monitoring and evaluation. The Media & Information Coordinator will be ensuring that the Advocacy/networking and Media components of the project are integrated with other components of the project for creation of synergies and mutual support. He/She will co-ordinate the production of a variety of media and communication materials and messages focused on creating awareness and possible coping strategies.

Good communication skills, excellent command of spoken and written English, ability to work under pressure, and team building skills are essential.

Candidate should possess a Bachelor's Degree in Sociology/Economics/Journalism/Development Management /Law with minimum 05 years' experience in a similar capacity. While NGO experience will be advantageous it is not essential. Proficiency in Sinhala and/or Tamil is desirable. The position will be based in Kilinochchi with extensive field travel.

**PROJECT CO-ORDINATOR - WATER & SANITATION - Vavuniya or Kilinochchi**

The Water and Sanitation Co-ordinator will be responsible for providing technical and planning inputs for provision of critical rehabilitation facilities to programme participants in accordance with the Sphere standards. He/she will be overseeing a major rehabilitation effort, designing and delivering most of the inputs. The Water & Sanitation Co-ordinator will be responsible for overall programmatic, administrative and financial aspects of planning and implementing the project activities effectively and efficiently.

Good communication skills, excellent command of spoken and written English, ability to work under pressure, problem solving skills and team building skills are essential.

Candidate should possess a Degree or Diploma in Social Science / Business Administration with 05 years' experience in water and sanitation. Proficiency in Sinhala and/or Tamil is desirable. The position involves extensive field travel.

**CO-ORDINATOR - PROGRAMME SUPPORT - Anuradhapura**

The Programme Support Co-ordinator will be responsible for a wide range of facilities and management functions that are crucial for the successful operation of the Programme. He/She will be effectively co-ordinating with other senior members to ensure timely availability of all required support services for effective implementation of the programme. The Programme Support Co-ordinator will be responsible for efficient and cost effective use of the support staff and as a member of the team ensures that CARE material resources are equally and effectively utilized by all levels of staff to optimize operation costs. He/She will also be responsible for the office operations, including the availability of adequate office space, power, water and communication services for the office, provisioning of furniture and fixtures, maintenance of vehicles, liaison with vendors, service providers and government authorities, maintaining inventory and such as activities that are necessary for the running of the office.

Good communication skills, excellent command of spoken and written English, ability to work under pressure, problem solving & decision making skills and team building skills are essential.

Candidate should possess a Degree in Business Administration/Finance/ Social Science/Commerce with 05 years' experience in a similar capacity OR G C E (A/L) with 08 years experience in handling financial, administration, procurement and human resources functions. Proficiency in Sinhala and/or Tamil is desirable. The position involves field travel.

**PROJECT OFFICERS - Kilinochchi/Mullaitivu/Vavuniya/Anuradhapura/Trincomalee (11 positions)**

The Project Officer will be primarily responsible for overall implementation of the project interventions at field level in assigned geographical locations within the given time frame. He/She will be responsible for conducting need assessments, identifying project locations, participating target groups in consultation with partner organizations, Government of Sri Lanka representatives and the community. This being a position covering various sectors, the Project Officer should have technical background in shelter, water & sanitation, agriculture, animal husbandry and other traditional and non-traditional livelihood activities.

Candidates should be graduates / Diploma holders in Social Sciences, Agriculture or related field with 03 years' experience in community development work. Proficiency in Sinhala and/or Tamil is desirable. The position involves extensive field travel. A valid license to ride a motorcycle is essential.

**All appointments will be on renewable Contract basis.**

Suitably qualified candidates are encouraged to apply with names, addresses, and telephone numbers of two non-related referees within 7 days of this advertisement. The post applied for should be indicated on the top left-hand corner of the envelope. We thank all applicants, but only the short-listed candidates will be notified.

***Women are highly encouraged to apply***

***CARE is an equal opportunity employer***

Director - Human Resources
INTERNATIONAL-SRI LANKA
7/A, Gregory's Road,
Colombo 07.
Email: hrd@care.lk

The Director,CARE
CARE International – Srilanka,
Old post office,
Kandy road,
Paranthan.
T.P 0212285093 - 0212285135
E-Mail: Knochi@care.lk

(சி-13608)

-ஈராக் மீது போர் தொடுக்க-

# உளவுத்துறை அதிகாரிகளின் ஆலோசனைகளால் ஏமாற்றமடைந்தேன் என்கிறார் கொலின் பவல்



(வோஷிங்டன்)

ஈராக் மீதான போருக்கு முன்னதாக தனக்கு வழங்கப்பட்ட உளவுத் துறை அதிகாரிகளின் ஆலோசனைகளால்தான் மிகுந்த ஏமாற்றமும் கவலையும் அடைந்திருப்பதாக ஈராக்கை ஆக்கிரமிக்கும் முடிவைக் கொண்டிருந்த முன்னாள் அமெரிக்க அரச துறைச் செயலாளர் கொலின் பவல் தெரிவித்தார்.

சில தகவல்களின் அடிப்படையில் உளவுத்துறையினருக்கு இருந்த சந்தேகம் தமக்குத் தெரிவிக்கப்பட வில்லை என்பதால் தாம் அதிருப்தி அடைந்துள்ளதாக அவர் தெரிவித் துள்ளார்.

அமெரிக்கா தனது தற்போதைய படையணிகளைத் ஈராக்கில் தொடர்ந்து பேண முடியுமென்று தான் கருத வில்லையென்றும் ஆனால் குறைந்தளவிலான படை அங்கு சில வருடங்களுக்கு நிறுத்தப்பட வேண்டுமென்றும் கூறினார்.

அதேவேளை அமெரிக்கத் துணை அதிபர் முன்னறிவித்தல் எதுவுமின்றி ஈராக்கிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஈராக்கியப் பிரதமரிடம் பேச்சு நடத்திய பின் அண்மைய தேர்தல் குறித்தும் மதிப்பீடொன்றைச் செய்துள்ளார்.

# முடியாட்சியைத் துறக்கவுள்ளாராம் பூட்டானின் மன்னன்

இன்னும் மூன்று ஆண்டுகளில் தாம் முடியாட்சியைத் துறக்கப்போவதாக பூட்டான் மன்னர் தெரிவித்துள்ளார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் இமாலயப் பிராந்தியத்தில் முழுமையாக சனநாயகத்தேர்தல் நடக்குமென்றும் அவர் கூறியுள்ளார்.

அதே ஆண்டு தனது மகன் முடிசூடிக் கொள்வார் என்றும் முழுமையான முடியாட்சியிலிருந்து பூட்டான் பாராளுமன்றம் சனநாயகத்தை நோக்கி நகரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பூட்டானிற்கு நல்லாட்சியைத் தரக்கூடிய அரசியல் கட்சியை மக்கள் தேர்ந்தெடுப்பார்களென்ற முழு நம்பிக்கையும் தனக்கு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆப்கான் தாக்குதலில் மூன்று படையினர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான் போராளிகள் என சந்தேகிக்கப்படும் ஆயுதக் குழு ஒன்றினால் மேற்கொள் ளப்பட்ட தாக்குதல் சம்பவம் ஒன்றில் குறைந்தது மூன்று பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் ஆப்கானின் தென்பகுதி நகரான கந்தஹாருக்கு வெளியில் இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்புப் பணியில் ஈடுபட் டிருந்த பாதுகாப்புப் படையினர் மீது சுமார் 30 பேர் கொண்ட தலிபான் போராளிகள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களில் சுமார் ஆயிரத்து 400 பேர் வரை இந்த வருடத்தில் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## தன்மேல் கையெழுத்து



கேரள மாநிலம் கொச்சி அருகே குரியகாட்டுப்பகுதியில் உள்ள அதர்வஷா அறக்கட்டளைக்கு வந்திருந்த சனாதிபதி அப்துல் கலாம் மாணவர் ஒருவர் வரைந்ததன் ஓவியத்தில் கையெடுத்திடுகிறார்.

# உலக வர்த்தக அமைப்பு மாநாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிலையில் இந்தியா–கமல்நாத்

(ஹொங்கொங்)

உலக வர்த்தக அமைப்பு மாநாட்டில் விவசாய பொருட்கள் மற்றும் ஏற்றுமதி மீதான மானியங்கள் தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடும் நிலையிலுள்ளது என்று மத்திய வர்த்தக அமைச்சர் கமல்நாத் கூறினார்.

ஹொங்கொங்கில் உலக வர்த்தக அமைப்பு மாநாடு நடந்தது. உலக வர்த்தக அமைப்பு மாநாட்டின் (டபிள்யூ.டி.ஓ) இறுதிநாளான நேற்று முன்தினம் 149 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கடுமையான பேரம் பேசி ஓரளவு பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் கண்டுள் ளனர். 12 மணி நேரம் நடந்த இந்தப் பேச்சுவார்த்தைக்கு பின் மத்திய வர்த்தக அமைச்சர் கமல்நாத் நிருபர்களிடம் கூறுகையில்; "உலக வர்த்தக அமைப்பு மாநாட்டில் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிலையில் இந்தியா வுள்ளது.

மானியங்கள் குறைப்பை அமுல்படுத்த நிர்ணயிக்கப் படும் வரம்புதான் இதில் உள்ள முக்கிய பிரச்சினை. மானியங்கள் குறைப்பை அமுல்படுத்துவதற்கான வரம்பை 2010அல்லது 2013ஆம் ஆண்டு என வரையறுத்தால் அது 'பெரிய விஷயம்இல்லை. மூன்று வருடங்கள் என்பது பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாது" என்றார். நேற்றுமுன்தினம் உருவாக்கப்பட்ட44 பக்க நகல் தீர்மானத்தில் ஏற்றுமதி மீதான மானியங்கள் குறைப்பை அமுல்படுத்துவதற்கான கால அளவாக 2010 ஆம் ஆண்டு எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா வலியுறுத்திய சில விசேட பொருட்கள் மற்றும் சில விசேட பாதுகாப்பு அம்சங்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி இக் கூட்டத்தில் இறுதிமுடிவு எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்குவது தொடர்பான பிரச்சினையில் வளரும் நாடுகள் ஒன்றாகச் சேர்ந்துள்ளன. இதுதொடர்பான பிரிவின் மூலம் ஏழை விவசாயிகளுக்கு இந்தியா தொடர்ந்து மானியங்களை வழங்க வகை செய்கிறது. தொழிற்சாலை உற்பத் தித் துறையில் சிலவளரும் நாடுகளிடையே முழு அள விலான பரஸ்பர ஒப்பந்தம் ஏற்படாவிட்டாலும் பேச்சு வார்த்தை ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

# ஈராக்கில் கடத்தப்பட்ட பெண்மணி தீவிரவாதிகளால் நிபந்தனையின்றி விடுதலை

(பாக்தாத்)

ஈராக்கில் மறுசீரமைப்புப் பணிகளில் ஈடு பட்டு வந்த ஜேர்மனி நாட்டுப் பெண் சுசானி ஆஸ்தாப் என்பவரைத் தீவிரவாதிகள் கடந்த ஒரு மாதத்துக்கு முன் கடத்திச் சென்றனர்.

வடமேற்கு ஈராக்கில் காரில் சென்று கொண்டிருந்தவரைத் தீவிரவாதிகள் மடக்கி துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றனர்.

ஈராக்கில் இருந்து ஜேர்மனி நாட்டவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட வேண்டும். இல்லா விட்டால் தலையைத் துண்டித்து சுசானியைக் கொலை செய்வோம் என்று சதாம் ஹுசைன் ஆதரவுத் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்தனர்.

சுசானியை விடுதலை செய்யுமாறு அவரது உறவினர்கள் உருக்கமான வேண்டுகோள் விடுத்து இருந்தனர்.

இந்த வேண்டுகோளை தீவிரவாதிகள் ஏற்று ஒரு மாதத்திற்கு பின் சுசானியை எந்த நிபந்தனையும் இன்றி விடுதலை செய்தனர்.

ஜேர்மனி வெளியுறவு மந்திரியும் இதை உறுதி செய்துள்ளார்.

ஆனால் ஒரு மாதமாக தீவிரவாதிகளின் பிடியில் இருக்கும் இரண்டு கனடா நாட்ட வர்கள் ஒரு அமெரிக்கர், ஒரு இங்கிலாந்து நாட்டவரின் கதி என்ன என்பது இன்னும் தெரியவில்லை.

# ஏரியல்ஷரோன் மருத்துவமனையில்



(ஜெருசலேம்)

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் நேற்று முன்தினம் தனது அலுவலகத்தில் இருந்து காரில் வீடு திரும்பிக் கொண்டி ருந்தபோது அவருக்கு திடீர் என்று உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அத்துடன் மூச்சுத் திணறலும் ஏற்பட்டது. கை கால்கள் செயல் இழந் தன. காரிலேயே அவர் மயங்கி விழுந்தார். உடனடியாக சாரதி அவரை ஜெருசலேமில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டு இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். ஆனால் அவர் அபாயக் கட்டத்தைத் தாண்டி விட்டார். அவரது உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்னும் நான்கு நாட்கள் அவர் மருத்துவமனையிலேயே தங்கியிருப்பார்.

77 வயதான இஸ்ரேல் பிரதமர் ஏரியல்ஷரோன் கடந்த சில நாட்களுக்கு முன்புதான் லிகுத் கட்சியில் இருந்து விலகி புதிய கட்சி தொடங்கினார். அடுத்த ஆண்டு மார்ச் மாதம் அங்கு தேர்தல் நடக்க விருக்கிறது.

## பிறந்த நாள் கொண்டாட்டம்




சீனாவின் புஜிவா நகரில் உள்ள வனவிலங்கு பூங்காவில் உள்ள பண்டா கரடி தனது 25 ஆவது பிறந்த நாளை கேக் வெட்டிக் கொண்டாடுகிறது.

# நஞ்சு கலந்த கிணற்று நீரால் 113 மாணவர்கள் மயக்கம்

சீனாவின் பாங்சான் மாகாணத்தில் உள்ள ஒரு பாடசாலையின் விடுதியில் 113 மாண வர்கள் திடீரென்று மயங்கி விழுந்தனர். உடன டியாக அவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அந்த விடுதியில் இருந்த கிணற்று நீரில் விஷம் கலந்ததால் தான் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அமோனியம் நைத்ரேட் மற்றும் நைத்ரிக் அமிலம் அதிக அளவில் கிணற்று நீரில் கலந்திருப்பது விசாரணையில் தெரிய வந்தது. கிணற்று நீரில் இது கலந்தது எப்படி என்பது குறித்து விசாரணை நடைபெற்றது.

ஏற்கனவே சீனாவின் ஒரு ஆற்று நீரில் நஞ்சுத்தன்மை உள்ள இரசாயனப் பொருட் கள் கலந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத் தியமை தெரிந்ததே.

# பல்கலை சமூகத்தின் பேரணி மீது இராணுவத்தினர் விளைவித்த கொடூரம்




பேரணி



படையினருக்கு விளக்கும் துணைவேந்தர்





























(படங்கள் : ஆனசிலின், செல்வா, 41)

# நாட்டுப்பற்றாளர் குணரத்தினம் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வு







(படங்கள்:-சசி)

## நாட்டுப்பற்றாளர் குணரட்ணத்தின் பூதவுடலுக்கு கிளிநொச்சியில் நேற்று உணர்வு பூர்வஅஞ்சலி

(கிளிநொச்சி)

பிரபல விளையாட்டுத்துறை நிர்வாகியும் தமிழீழ விளையாட்டு துறைக்கு அரும் பணி ஆற்றி வந்தவருமான நாட்டுப்பற்றாளர் ஏ.எஸ் குணரட்ணம் அவர்களின் பூதவுடலுக்கான அஞ்சலி நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி தூயவன் அரசறிவியல் கல்லூரியில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஈகச்சுடரினை அமரர் ஏ.எஸ் குணரட்ணம் அவர்களின் துணைவியாரும் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து அஞ்சலி உரைகளை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பூதவுடலுக்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழீழ தேசியக் கொடி போர்த்திக் கௌரவித்ததுடன் மலர்மாலையும் அணிவித்தார். தொடர்ந்து மலர் வணக்கம் நடைபெற்றது. இதில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே பாலகுமாரன், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் மற்றும் துறைசார்ந்த பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள், விளையாட்டு வீரர்கள், விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

ஏ.எஸ் குணரட்ணம் அவர்களின் பூதவுடல் இன்று யாழ்.மாவட்டத்தில் அவரதுபாடசாலை உட்பட பல்வேறு இடங்களிலும் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நடைபெறவுள்ளது.

## தமிழீழம் சர்வதேச சாதனைகளை ஈட்ட வேண்டும் என்கிற கனவுடன் வாழ்ந்தவர் குணரட்ணம்

### இறுதி வணக்க நிகழ்வில் கி. பாப்பா

(கிளிநொச்சி)

தமிழர் தாயகத்தை விளையாட்டுத் துறையில் சர்வதேசம் வரை கொண்டு சென்று சாதனைகள் ஈட்ட வேண்டும் என்ற கனவுடன் வாழ்ந்து அதற்காகவே உழைத்து வந்த பிரபல விளையாட்டுத்துறை நிர்வாகி குணரட்ணத்தின் இழப்பு விளையாட்டுத்துறைக்கு ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத இழப்பென தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் தனது இரங்கல் உரையில் தெரிவித்துள்ளார். தமிழர்கள் தனித்துவமாக விளையாட்டுத் துறையில் ஒரு நல்ல எதிர் காலத்தை அடைய வேண்டும் என்ற பேரவாவை அவர் நீண்டகாலமாகக் கொண்டிருந்தார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் நிர்வாக கட்டமைப்புக்குள்ளே விளையாட்டுத்துறை செயற்பாடுகள் ஒரு நல்ல முன்னேற்றத்தை அடைய வேண்டும் என்று பாடுபட்டவர்களில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

அந்த வகையில் அவருடைய விளையாட்டுத்துறை செயற்பாடுகள் அளவிட முடியாதது குறிப்பிட்டு சொல்வோமேயானால் தமிழர்கள் ஒரு தேசிய இனமாக அவர்கள் விளையாட்டுத் துறையிலும் நல்ல சாதனையாளராக வரவேண்டும் என்ற செயற்பாட்டில் அவர் கடுமையாக உழைத்தார்.

சிறிலங்காவில் தமிழர்கள் பிரதிநிதித்துவப் படுகின்ற பல விளையாட்டுச் சங்கங்களில் இவர் அங்கத்துவம் பெற்றிருப்பதுடன் அதனூடாக சிங்கள இனம் மட்டும் இந்த சிறிலங்காவுக்கு சொந்தமில்லை, தமிழர்களுக்கும் சமபங்குண்டு, அதனால் தமிழர் பிரதேசத்தில் விளையாட்டு தனித்துவமாக கட்டியெழுப்பப்படவேண்டும் என்ற இறுமாப்பும் அதற்கான உழைப்பும் மிகக் கடுமையாக இருந்தது.

கடைசியாக இலங்கை தடகள சம்மேளனம் ஊடாக தமிழர் பகுதி பிரதிநிதியாக பின்லாந்தின் தலைநகர் கெல்சிங்கில் நடைபெற்ற சர்வதேச தடகள போட்டிக்கு இலங்கை குழுவை அழைத்து சென்றபோது தன்னை தமிழீழத்தின் பிரதிநிதியாக காட்டிக் கொள்ளவும் அஞ்சவில்லை.

அப்போது அங்கு வைத்து அந்நாட்டின் விளையாட்டு அமைச்சர் மற்றும் சர்வதேச பயிற்றுவிப்பாளர்கள் மத்தியில் விரைவில் எமது அடையாளத்தை காட்டி சர்வதேச போட்டிகளில் தமிழீழத்தின் வீரர்களுடன் சந்திப்போம் என்ற செய்தியை கூறிவிட்டு வந்தார்.



ஒரு குழந்தைக்கு குழந்தையாகவும், வயதானவர்களுக்கு வயதானவராகவும், இளைஞனுக்கு இளைஞனாகவும் நிர்வாகத்திற்கு நிர்வாகியாகவும், திகழ்ந்த ஓர் இளகிய மனம் படைத்த மனிதன் இனியொருவர் கிடைப்பாரா?

இவரது தோற்றம் என்றும் தமிழ் மக்களால், விளையாட்டு வீரர்களால் தேசப்பற்று உள்ளவர்களால் என்றும் மறக்கப்பட முடியாத சொத்தாக என்றென்றும் வாழ்வார் என தனது அஞ்சலி உரையில் தெரிவித்தார்.

## சுற்றாடல் சுகாதாரத்தைக் கடைப்பிடித்து தாயகப் பிரதேசத்தை வளப்படுத்துவோம்

–தமிழீழ சுகாதார சேவைகளின் சூழல் மேம்பாட்டுப்பிரிவு அழைப்பு

(அலுவலக செய்தியாளர்)

**அனைத்து தொழில்நிலையங்களும் சுற்றாடல் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்குமாறு தமிழீழ சுகாதார சேவைகளின் சூழல் மேம்பாட்டுப்பிரிவு வேண்டுகோள்விடுத்துள்ளது. தமிழர் தாயகப்பிரதேசமெங்கும் எமது சுற்றுச் சூழலைப் பாதுகாப்பாகப் பேணிக்கொள்ள வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.**

நவீன நகரமாக்கல் திட்டங்களும் அதனுடன் இணைந்த தொழில் நுட்பத்திறன்களும் எமது சுற்றாடல் சுகாதாரத்திற்குப் பாதிப்பையேற்படுத்துகிறது. அத்துடன் எமது சுற்றாடலைக் கவனிக்காத செயற்பாடுகளும் நிலம், நீர்,வளி மாசடைவதற்குக் காரணமாக அமைந்து சூழலின் சமநிலையில் பாதிப்பையேற்படுத்துகிறது. எனவே சுற்றுச்சூழல் பாதிப்பைக்கவனத்திற்கொண்டு 2006ஆம் ஆண்டிலிருந்து தமிழீழ சுகாதாரசேவைகளின் சுற்றுச்சூழல் பிரிவினரால் சுற்றாடல் சுகாதாரப் பாதிப்பு நடைமுறைகள் வியாபார நிலையங்களிற்கும் நடைமுறைப்படுத்தும் செயற்பாடு முடுக்கிவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே சுற்றாடல் சுகாதார மேம்பாட்டுக்கு கீழ்வரும் நடைமுறைகளை கவனத்திற்கொண்டு செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

☐ நிலம், நீர் மாசடையக் கூடியவகையில் கழிவு நீர் என்பவற்றை இறுதியகற்றாது இறுதியகற்றலுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலும் நீர்த்தொட்டிகள், நீர் உறிஞ்சு குழிகளிலும் இறுதியகற்றப்படவேண்டும்.

☐ தூய்மிப்பகங்கள் (சேவீஸ் ஸ்ரேசன்) வாகன சீர்களங்கள் ஆகியவற்றில் கழிவுநீர், ஒயில் கலந்த கழிவுநீர், ஏனைய இரசாயனக் கழிவுகளைப் பாதுகாப்பாகச் செயன்முறை ரீதியான குழிகளில் இறுதியகற்றல் புறச்சூழலுடன் தொடர்புபட்டு இறுதியகற்றும் வரை தவிர்க்கப்படவேண்டும்.

☐ சிகையலங்கார நிலையங்களின் மயிர்க் கழிவுகள் பிரதேச சபையால் இறுதியகற்றல் பிரதேசங்களில் இறுதியகற்றப்படல் வேண்டும்.

☐ பழையவாகன உதிரிகள், வாகன சீர்களப்பொருட்களையும் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டும் இறுதியகற்றப்பட வேண்டும்.

☐ அரிசியாலைகளின் உமி,கழிவுநீர் என்பன காற்றுடன் வெளியுடன் தொடர்புபடாதவகையில் அகற்றப்படவேண்டும்.

☐ மனித மலக்கழிவுகள் ஒதுக்கப்பட்ட இறுதியற்றல் இடங்களில் மாத்திரம் இறுதியகற்றப்படவேண்டும்.

☐ சலவைத் தொழிலாளர்கள் ஒதுக்கப்பட்ட இடங்களில் மாத்திரம் சலவை தூய்மைப் படுத்தப்பட வேண்டும், பிரதான வாய்க்கால்கள் நன்னீர்க்குளங்களில் சலவை செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

☐ பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகள் நிலம் நீர் நிலைகளில் சேருவதைத் தவிர்த்து இறுதியகற்றல் பிரதேசத்தில் இறுதியகற்றல் வேண்டும். சுற்றாடலில் எரிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

☐ நீர் தேங்கும் குழிகள் மண் அகழும் குழிகளும் சுற்றாடலில் நோய்க்கிருமி காவிப்பெருக்கமின்றி பேணப்படவேண்டும்.

☐ உணவகங்கள், தங்கு விடுதிகளின் கழிவு நீர்கள் கிருமியழிப்புத் தொட்டியில் இறுதியகற்றப்படவேண்டும்.

☐ சுற்றாடலில் திண்மக்கழிவுகள் தேக்கமடைவதால் விஷ ஜந்துகள் பெருக்கமடைகின்றன. சுற்றாடலில் தேங்காதவாறு பேண வேண்டும்.(தீ)

## மருதங்கேணி வைத்தியசாலையில் விசேட வைத்திய சேவை

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி முதலாம் ஆண்டை முன்னிட்டு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் விசேட வைத்தியசேவை நடைபெறவுள்ளதாக வைத்தியசாலை அதிகாரி யூடிறமேஸ் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடமராட்சிகிழக்கு மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை நிர்வாகமும் யாழ். மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிமனையினரும் இணைந்து இந்தச் சேவையை நடத்துகிறார்கள்.

இம்மாதம் இருபத்திமூன்றாம் திகதி மாத்திரம் இந்த விசேட சிகிச்சைகள் நடைபெறும் யாழ். போதனா மருத்துவமனை வைத்திய நிபுணர்களின் ஒருங்கிணைந்த சேவையே இதுவாகும்.

இந்தச் சேவையில் சத்திரசிகிச்சைகள், பொதுமருத்துவம், குழந்தை மருத்துவம், மகப்பேறு, உளநலம், பெண் மருத்துவம், என்பு முறிவு, கண், பல் சோதனைகளும் அவற்றுக்கான சிகிச்சைகளும் இடம்பெறும் இதேவேளை ஆய்வு கூடப்பரிசோதனைகளும் எக்ஸ் கதிர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

பயன் பெறவிரும்புபவர்கள் அனைவரையும் தவறாது கலந்து சிகிச்சை பெறுமாறும் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை வைத்திய அதிகாரி யூடிறமேஸ் ஜெயக்குமார் வேண்டியுள்ளார். (லோ,தீ)

## கண்டெடுப்பு

யோகராசா தர்மகிருஷ்ணன் (ஏழாம் யூனிற் இராமநாதபுரம்) என்பவரின் தேசிய அடையாள அட்டை, நிரந்தர பயண அனுமதி அட்டை மற்றும் சில ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி யிலுள்ள ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

# மகிந்தவிடம் சு.க.தலைமைத்துவம்; கட்சியின் மூத்த தலைவர்கள் முடிவு

## -தேர்தலொன்றுக்கு முன் சாத்தியமாகும்

[கொழும்பு]

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரைவில் நியமிக்கப்படவுள்ளார். இதுதொடர்பில் சுதந்திரக்கட்சியின் அவசர மாநாடு கூட்டப்பட உள்ளதாக சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

சுதந்திரக்கட்சியின் யாப்பின்படி அடுத்த செப்ரெம்பரில் தான் கட்சி மாநாடு நடைபெற வேண்டும்.ஆனால் கட்சிக்குப் புதிய தலைவரை நியமிப்பதற்காக அவசர மாநாட்டை கூட்ட சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் முடிவு செய்துள்ளனர். மார்ச் மாதம் உள்ளூராட்சித் தேர்தல் அல்லது பாராளுமன்றத்தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாகவே மகிந்தராஜபக்ஷவிடம் சுதந்திரக் கட்சியை ஒப்படைக்கவும் அவர்கள் தீவிரம்காட்டி வருகின்றனர்.

சனாதிபதியாக உள்ள மகிந்த ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டில் கட்சி இல்லாது இருந்தால் நடைமுறையில் அவர் இயங்குவது சவாலான நிலைமையாக இருக்கும் என்பதால் இந்த முடிவை மேற்கொள்வதாகவும் சுதந்திரக்கட்சித் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

மகிந்தவிடம் சுதந்திரக்கட்சித் தலைமைப் பொறுப்பு ஒப்படைக்கப் படக்கூடும் என்றும் இதற்கான செயற்பாடுகள் நடைபெறுவதையும் அரசாங்கத்தின் பல அமைச்சர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இதனிடையே மார்ச் மாதம் நடத்தப்படவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்தி வைக்குமாறு பவ்ரல் கண்காணிப்புக்குழு வலியுறுத்தியுள்ளது.

# மகிந்த-ஆறுமுகன்தொண்டமான் நல்லெண்ண ரீதியில் பேச்சு

(கொழும்பு)

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று நிகழ்ந்துள்ளது.

அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு பிற்பகல் அளவில் நடைபெற்றுள்ளது.

இதன்போது இருவரும் நல்லெண்ணத்தை வளர்த்துக்கொள்ளும் வகையிலான விடயங்கள் குறித்து பேச்சு நடத்தியதாக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.இந்தப் பேச்சுவார்த்தை இரண்டு மணித்தியாலங்களாக நடைபெற்றது. கிளிநொச்சிக்கு கடந்த சனிக்கிழமை தாம் மேற்கொண்ட விஜயம் தொடர்பாகவும் அங்கு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தமக்குமிடையில் இடம பெற்ற சந்திப்பு குறித்தும் பேசப்பட்டதாக யோகராஜன் குறிப்பிட்டுள்ளார்.(32)

# மகிந்த ராஜபக்ஷ- ரணில் விரைவில்தனியே சந்திப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தனியே சந்திக்கும் முக்கிய சந்திப்பு அடுத்த சில நாட்களில் நடைபெறக்கூடும் என்று சனாதிபதி மாளிகை வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன. வடக்கு-கிழக்கு பிரச்சினைகள் உட்பட தேசிய மற்றும் அரசியல் பிரச்சினைகள்பற்றி இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்படவுள்ளது. தனது கட்சிப் பிரதிநிதிகளுடன் கடந்த வியாழக்கிழமை மகிந்தவை ரணில் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் ஆளுங்கட்சி பிரமுகர்களும் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் இருவரும் தனித்து சந்தித்துப் பேசவும் முடிவெடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# சிறிலங்காவில் அதிகரிக்கும் பாலியல் வல்லுறவுகள்!

(கொழும்பு)

சிறிலங்காவில் பாலியல் வல்லுறவுச்சம்பவங்கள் அதிகரித்திருப்பதாக பொலிஸ் அறிக்கை தெரிவித்துள்ளது.

கடந்த 11 மாதங்களில் 350 பாலியல் வல்லுறவு வழக்குகள் பதிவாகியுள்ளன. இந்தக் கொடூரத்துக்குள்ளாகிற பலரும் பொலிஸ் நிலையங்களுக்குப் புகார் கொடுக்கச் செல்லும் போதும் கூட கடமையிலுள்ள பொலிசாரால் சித்திரவதைக்குள்ளாவதும் நீடிப்பதாக அந்த அறிக்கை கூறுகின்றது.

வல்லுறவுச் செயல்களால் மன உளைச்சலடையும் பாதிக்கப்பட்டோர் மேலும் சட்டத்தின் காவலர்களாலும் துன்புறுத்தப்படுவதால் அவர்கள் வாழ்க்கைமீது நம்பிக்கையிழந்து சமூகத்திலிருந்து மறைந்து வாழ வேண்டிய அவலத்துக்கு உள்ளாவதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

# நிதிப்புலனாய்வுப் பிரிவை நிறுவ சிறிலங்கா மத்திய வங்கி தீர்மானம்

சட்டவிரோதமான நிதியை சட்டபூர்வமாக்குவதைத் தடுப்பதற்கும் முழு அதிகாரங்களுடனான நிதி புலனாய்வுப் பிரிவை நிறுவுவதற்கு சிறிலங்கா மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. மத்திய வங்கி நிர்வாகத்துக்குள்ளேயே இந்தப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

மத்திய வங்கி அதிகாரிகள் மற்றும் சிறப்பு இரகசியப் பிரிவு பொலிசார் இந்தப் பிரிவில் செயற்படுவார்கள். சிறிலங்காவுக்குள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பணக்கொடுக்கல் வாங்கல்களை சோதனையிடுவதற்கும் எந்தவொரு நபரினதும் வங்கிக்கணக்கு, முதலீட்டுச் சொத்துக்கள் ஆகியவற்றை சோதனையிடுவதற்கும் இந்தப் பிரிவிற்கு அதிகாரமளிக்கப்படும்.

இந்தப் பிரிவிற்குப் போலியான தகவல்களை வழங்குவோருக்கும், வேண்டுமென்றே தகவல்களை மறைப்போருக்கும் தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்வோருக்கும் எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தண்டனை அல்லது தண்டனைத் தொகை விதிக்கக் கூடிய வகையில் சட்டங்கள் உருவாக்கப்படும். சிறிலங்காவில் நிதிப் புலனாய்வுப்பிரிவை ஏற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை ஆலோசனைகளை வழங்குவதற்காக அமெரிக்க நிதி அதிகாரசபையின் சிறப்பு பிரதிநிதிகள் தற்போது சிறிலங்கா வந்துள்ளனர்.

அவர்கள் கடந்த 13ஆம் திகதி சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, இரகசியப் பிரிவு பொலீஸ் பொறுப்பாளரான லயனல் குணதிலக்க, அதன் அதிகாரி சிசிர மெண்டிஸ் ஆகியோரைச் சந்தித்துள்ளனர். இந்தப் பிரதிநிதிகள் மத்திய வங்கியின் அதிகாரிகளையும் சந்தித்து உரையாடியுள்ளனர். இந்தப் பிரதிநிதிகள் சட்டமா அதிபர் திணைக் கள அதிகாரிகளையும் சந்தித்து இந்த அமைப்புக்கான சட்ட மூலத்தைத் தயாரிப்பது குறித்தும் உரையாட உள்ளனர். பயங்கரவாதத்தை தடுக்கும் சர்வதேச திட்டத்தின் கீழ் பயங் கரவாதத்திற்கு நிதி வழங்குவதைத் தவிர்க்கும் வகையில் சட்டங்களை உருவாக்குவதற்கு சிறிலங்காவும் இணங்கியிருப்பதால் இந்தப் பிரிவு ஏற்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது..

# மகிந்த, பொன்சேகா நடவடிக்கையால் சிறிலங்கா இராணுவத்தில் சீர்குலைவு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷவும், சிறிலங்கா இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகாவும் பொறுப்பேற்ற பின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் சிறிலங்கா இராணுவம் சீர்குலையத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒக்ரோபர் மாதம் முன்னாள் சனாதிபதி சந்திரிகா, இராணுவ அதிகாரிகளின் ஓய்வு வயதை 60 வயது வரை உயர்த்தினார். ஆனால், மேஜர் ஜெனரல்கள் உள்ளிட்ட இராணுவ அதிகாரிகளின் ஓய்வு வயதை மகீந்த ராஜபக்ஷ மீண்டும் 55 ஆகக் குறைத்தார்.

இதனால் சிறிலங்கா இராணுவம் அடுத்த ஆண்டு இறுதிக்குள் 13 மேஜர் ஜெனரல்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மகிந்தவின் இந்தப் புதிய உத்தரவையடுத்து பிரதித் தலைமை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, மேஜர் ஜெனரல் கிருஷ்ணரத்ன ஆகியோர் ஓய்வு பெற்றுவிட்டனர். இராணுவத்துக்குள் மிகுந்த நெருக்கடிகளை எதிர்நோக்கும் நிலை விரைவிலேயே ஏற்படக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## -வாகனக் கடத்தல் முறியடிப்பில்-

# கடத்தல்காரர்களில் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை

(புத்தளம்)

வாடகைக்கு அமர்த்திய வாகனத்தை கடத்திச்செல்ல முயன்றவர்களில் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று புத்தளம் சாலியவெவ பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

நுரைச்சோலை பிரதேசத்தில் வடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனத்தின் சாரதியை கரம்பை என்ற பகுதியில் கைகால்கள் கட்டப்பட்டநிலையில் புதருக்குள் தள்ளிவிட்டு பெண் ஒருவர் உட்பட மூவர் கொண்ட குழு வாகனத்தை கடத்திச் சென்றுள்ளது.இதனையடுத்து அங்கிருந்து தப்பிச் சென்ற சாரதி பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.முறைப்பாட்டை அடுத்து பொலிசாரால் புத்தளம்-அனுராதபுரம் வீதியில் 17 மைல்கல் பகுதியில் தமது சோதனைச் சாவடியில் வாகனத்தை சோதனையிட்டுள்ளனர்.

பொலிசார் இவர்களை கைது செய்ய முயன்ற போது அதில் ஒருவர் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் புத்தளம் புளியங்குளம் பகுதியைச்சேர்ந்த நீலவேணன் மீசலிங்கம் என புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் பெர்னான்டோ தெரிவித்துள்ளார். (32)

# ஐ.தே.க.வின் அதிருப்தியாளர் அணி ரணிலை அகற்ற தீவிர முயற்சி

## -ஆளும் தரப்புடன் கைகோர்க்கவும் உத்தேசம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பான முரண்பாடு கட்சிக்குள் தொடர்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த சனாதிபதித் தேர்தலில் ஏற்பட்டதோல்வியையடுத்து, கட்சித் தலைவர் பதவியையும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் ரணில் விக்கிரமசிங்க துறக்க வேண்டும் என்றும், அந்தப் பதவி தற்போதைய கட்சிப் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் கட்சியில் பல உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக கடந்த திங்கட்கிழமை கட்சித் தலைமைப்பீடமான சிறிகோத்தாவில் இடம்பெற்ற விசேட கூட்டத்தின்போது, கட்சித் தலைமை மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிகளை இராஜினாமாச் செய்வதற்கு ரணில் விக்கிரமசிங்க மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

கட்சியை மறுசீரமைப்பது தொடர்பாகப் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ராஜித சேனாரத்ன தலைமையிலான குழுவினரால் முன்வைக்கப்பட்ட ஏனைய பல யோசனைகளை ஏற்றுக்கொள்வதாக இந்தக் கூட்டத்தில் அவர் அறிவித்தார் எனினும், கட்சித் தலைமைப் பதவியையும், எதிர்க்கட்சித் தலைவர் பதவி யையும் ரணில் விக்கிரமசிங்க துறக்கவேண்டும் என்ற தமது பிரதான கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், இல்லாது போனால், கடுமையான நடவடிக்கைகளில் தாம் இறங்கநேரிடும் என்றும் அதிருப்தியாளர்கள் குழு எச்சரித்துள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுக் கட்சிகளும், கட்சிக்கு ஆதரவான பிரபல வர்த்தகர்கள் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் சிலரும், ரணில் விக்கிரமசிங்கவே தொடர்ந் தும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவராகவும், எதிர்க்கட்சித் தலைவராக வும் நீடிக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமது கோரிக்கைகளை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொள்ளாவிட்டால் அரசாங்கத்தில் இணைவது குறித்து, சில ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பரிசீலித்து வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன

# தினக்குரல் ஊடகவியலாளர் கைதுக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

தினக்குரல் ஊடகவியலாளர் உள்ளிட்ட ஊழியர்கள் கைது செய்யப்பட்டமைக்கு இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது .

இதுதொடர்பில் சிறிலங்கா ஊடகத்துறை அமைச்சர் அனுராபிரிய தர்சனயாப்பாவுக்கு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் அனுப்பியுள்ள மனுவில்.

கொழும்பிலிருந்து வெளியிடப்படும் தமிழ்தேசியப் பத்திரிகையான தினக்குரல் பத்திரிகையின் ஊடகவியலாளரான பா.பார்த்தீபன் மற்றும் தினக்குரல் கணனிப் பிரிவு ஊழியர்களான கோகுலன்,சர்வேஸ்வரன் ஆகியோர் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு,சாதாரண கிரிமினல் குற்றவாளிகளைப் போல காவல்நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதை இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# விளையாட்டு அரங்கு

**உலகெங்கிலும்** கோடிக்கணக்கான ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ள உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி 2006 யூன் 09 ஆம் திகதி ஜேர்மனியில் ஆரம்பமாகவுள்ள நிலையில் கிண்ணத்தைக கைப்பற்றப் போகும் அணி எது என்ற கருத்துக் கணிப்புகள் நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது.

இதில் இம்முறையும் பிரேசில் அணிக்கே வாய்ப்பு அதிகம் என்று கருதப்படுகின்ற போதும் பலமான பிரான்ஸ், இங்கிலாந்து அணிகளும் கிண்ணத்தைக் கைப்பற்றும் தகுதியில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேசில் அணியை பொறுத்து அனுபவம் வாய்ந்த வீரர்களுடன் பெயர் சொல்லும் அளவுக்கு புதிய இளம் வீரர்கள்




இடம்பிடித்திருப்பதால் அந்த அணி 2002 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய அணியை விட பலமான அணியாகக் கருதப்படுகின்றது.

பிரான்ஸ் அணியை பொறுத்து 2002 ஆம் ஆண்டு யப்பான், கொரிய நாடுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் உலகச்சம்பியன் அணியாக களமிறங்கியது. ஆனால் முதல் போட்டியிலேயே புதுமுக ஆபிரிக்க அணி ஒன்றிடம் அதிர்ச்சி தோல் வியை சந்தித்ததுடன் பரிதாபமாகவும் வெளியேறியது.

ஆனால் இத்தனைக்கும் பிரான்ஸ் அணி உலகின் அதிசிறந்த வீரர்களைக் கொண்டிருப்பதுடன் உலகின் தலை சிறந்த கோல் காப்பாளர்களையும் கொண்டுள்ளது. அவர்களில் ஒரு சிலரை தவிர ஏனையோர் அணியில் இருப்பதால் அவ் வீரர்களைக் கொண்டு இம்முறை கிண்ணத்தைக் கைப்பற்ற கடைசி வரையான முயற்சி ஒன்றை மேற்கொள்ளுமென எதிர்வு கூறப்படுகிறது.

இதே போன்று இங்கிலாந்து அணியையும் குறைத்து மதிப்பிட முடியாது அவ் அணி ஐரோப்பாவின் கதாநாயகன் என வர்ணிக்கப்படும் டேவிட்பெக்காம் உட்பட ஐரோப்பிய கழக அணிகளில் கலக்கி வரும் மைக்கல்ஓவன் வெயின்றூனி உட்பட மேலும் பல முன்னணி வீரர்களைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இந்த நிலையில் அரையிறுதி வரை முன்னேறி வெளியேறும் இங்கிலாந்து அதிர்ச்சி முடிவுகள் இனியும் இடம்பெறாது என ஊகிக்கப்படுகிறது.

இந்த நிலையில் முன்னணி வீரர்களில் ஒருவரான வெயின்றூனி கூறும்போது, உலகக்கிண்ணத்தை வென்று தனது அணி முகாமையாளருக்கு சமர்ப்பிக்கப்படவேண்டுமென. என சபதமிட்டுள்ளார்.

இவை ஒரு புறமிருக்க போட்டியை நடத்தும் ஜேர்மனி 2002 ஆம் ஆண்டு இறுதிப் போட்டிவரை முன்னேறி கிண்ணம் பெறும் வாய்ப்பை இழந்தது. இந்தநிலையில் கிண்ணத்தைக் கைப்பற்ற ஏனைய அணிகளுக்கு இடமளிக்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

கிருஷ்ணா

## சொர்க்கமாகுமா சொந்தமண்



**எல்லோருக்கும்** ஏதாவதொரு ஆசை இருக்கத்தான் செய்யும். சிலர் படிப்பில் சாதிக்க வேண்டும் என்று விரும்புவார்கள். சிலர் விளையாட்டில் பதக்கங்கள் குவிக்க வேண்டுமென ஆசைப்படுவார்கள். இதைப் போல் கால்பந்து நட்சத்திரம் ரொனால்டோவுக்கும் ஒரு கனவு இருக்கிறதாம். இது கொஞ்சம் வித்தியாசமானது. என்ன தெரியுமா? இவரது ஆசை உலக அமைதிக்கான நோபல் பரிசு பெறுவது தானாம். இது என்னடா விளையாட்டு வீரராக இருந்து கொண்டு எப்படி நோபல் பரிசு பெறுவது என்று நீங்கள் நினைக்கலாம்.

இவர் விளையாட்டே வாழ்க்கை என்று இராது உலகத்திற்கு நன்மை விளைவிக்க பாடுபட்டு வருகிறார். இந்த நிலையில் அவர் இப்படிக் கூறுகிறார்.

எனது நெருங்கிய நண்பர் ஒருவர் தற்போது பிரேசிலின் மேயராக இருக்கிறார். அவர் ஒரு நாள் பிரேசிலின் சனாதிபதி ஆவார். அப்போது விளையாட்டுத் துறை அமைச்சர் பதவியை எனக்கு வழங்குவதாகக் கூறியுள்ளார். அப்போது எனது ஆசை நிறைவேறுமாம்.

பிரேசில் அணியில் அசைக்க முடியாத வீரராகத் திகழும் இவர் இரண்டுமுறை உலகக் கிண்ணத்தை வென்ற பிரேசில் அணியில் இடம்பெற்றுள்ளார். சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு வழங்கும் சிறந்த வீரருக்கான விருதை மூன்று முறை தட்டிச் சென்ற



## உன்னத வீரரின் உயரிய சிந்தனை

ரொனால்டோ பணக்கார கழகமான ஸ்பெயினின் ரியல்மட்ரிட் அணிக்காகவும் விளையாடி வருகின்றார்.

எந்நேரமும் போட்டி பயிற்சி என இருந்தாலும் மற்ற வீரர்களைப் போல் கால்பந்து மட்டும் வாழ்க்கை என்று இராது மனித நேயப் பணிகளில் ஈடுபட சிந்திக்கத் தொடங்கிவிட்டார். ரொனால்டோ

பிரேசிலின் நல்லெண்ணத் தூதராகவும் செயற்பட்டு வரும் இவர், அண்மையில் பிரேசில் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தனது நீண்ட நாள் ஆசையைக் கொட்டி தீர்த்துள்ளார்.

உலக அமைதிக்கான நோபல் பரிசுவெல்ல எனது முழு வாழ்க்கையும் செலவிடத் தயாராக இருக்கிறேன். மன நிறைவு அளிக்கின்ற இந்தப் பணிக்காக என்னை அர்ப்பணிக்க தயாராக இருக்கிறேன் என உருக்கமாக கூறியுள்ளார்.

அதே நேரத்தில் கால்பந்தையும் மறந்து விடவில்லை. ரொனால்டோ பிலேயின் உலக சாதனையை முறியடிப்பது தான் எனது தனிப்பட்ட இலட்சியம் என்கிறார்.

கால்பந்து உலகின் நாயகனாக கருதப்படும் பிலே உலகக் கோப்பைத் தொடரில் மட்டும் 12 கோல் அடித்திருக்கிறார். இதை சமன் செய்துள்ள ரொனால்டோ இன்னும் ஒரு கோல் அடிக்கும் பட்சத்தில் பிலேயை முந்தி விடலாம். அதே நேரத்தில் இன்னும் மூன்று கோல் அடித்தால் உலகக் கோப்பைத் தொடரில் அதிக கோல் அடித்த வீரர் என்ற சாதனையையும் படைத்து விடலாம்.

இதற்கு முன் ஜேர்மனியின் முல்லர் 1970,1974 உலகக்கோப்பையில் விளையாடி 14 கோல் அடித்து சாதித்துள்ளார். இந்த சாதனையை 2006 இல் ஜேர்மனியில் நடக்கவிருக்கும் உலகக் கோப்பைத் தொடரில் ரொனால்டோ முறியடிக்கும் அதே வேளை அவரது கடைசி உலகக் கிண்ணப் போட்டியாக அது அமையலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இ. சியான்

**விளையாட்டு** என்றால் எந்தவொரு நாடும் வெளிநாட்டை விட உள்நாட்டில் தன்னை நிலைநிறுத்திக் காட்டவே முற்படுவதுண்டு. இது விதிவிலக்கானதொன்றுமல்ல விதிகளுக்கு மாறானதுமல்ல யதார்த்தமானதொன்று.

அந்த வகையில் விளையாட்டில் குறிப்பாக, கிரிக்கெட்டில் தத்தம் நாடுகள் தங்கள் பந்து வீச்சாளர்களுக்கு ஏற்றவாறோ அன்றி துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாகவோ ஆடுகளங்களை அமைப்பதுண்டு.

இதில். இந்திய, சிறிலங்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாகவும், துடுப்பாட்ட வீரர்களுக்கு ஏற்ற வகையிலான ஆடுகளங்களை காலத்திற்குக் காலம் அதிகமாக அமைத்திருப்பதுடன், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து. தென்னாபிரிக்க, மேற்கிந்தியத்தீவுகள் போன்ற நாடுகள் வேகப்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமான ஆடுகளங்களை அமைத்திருக்கின்றன.

இதன் அடிப்படையில் தற்பொழுது இங்கிலாந்து, சிறிலங்கா அணிகளின் தோல்விகள் என்பது அந்நாட்டு ரசிகர்களுக்கு விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்ற தோரணையில் எண்ண வைக்கும் விதமாகவுள்ளது.

அதாவது, அந்நிய மண்ணில்தானே இத் தோல்விகள் பெறப்பட்டது என ஆறுதல் அடையும் வண்ணம் தங்களைத் தேற்றிக் கொள்கின்றன.

இதில், சிறிலங்கா அணியைவிட இங்கிலாந்து ரசிகர்கள் திருப்தி கொள்ளும் வகையில் இருக்கும் எனின் சற்று ஏற்றுக்கொள்ளலாம்.

ஏனெனில், அவ்வணியின் கடந்த கால வெற்றிகள் என்பது அதன் சொந்த மண்ணில் ஈட்டப்பட்டதோடு, மற்றையவை அந்நாட்டு ஆடுகளங்களை ஒத்ததான ஆடுகளங்களிலேயே பெறப்பட்டவையாகும்.

அதாவது, தொடர்ச்சியாக ஆறு டெஸ்ட் தொடர்களைக் கைப்பற்றியிருந்த இங்கிலாந்து அணி கிரிக்கெட் உலகில் புதிய பரிமாணத்தைப் பெற்றுவிட்டதோ? என்ற எண்ணப்பாட்டை விமர்சகர்கள் மத்தியிலும், ரசிகர்கள் மத்தியிலும் ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் பாகிஸ்தானில் அவ்வணிக்கு ஏற்பட்ட தோல்விகள் புதிய பரிமாணத்தில் ஏற்பட்ட ஒரு தடையாக இருந்தாலும் அது ஆசிய மண்ணில் ஏற்பட்டிருப்பது சற்று திருப்தி அளிக்கும் ஒன்றாகவே இருக்கும்.

ஆசிய ஆடுகளங்களின் தன்மையே அவர்களின் தோல்விக்கு காரணம் எனக் கூறின் ஓரளவு பொருத்தப்பாடானதே.

இதேவேளை, கடந்த ஆண்டும் இந்த ஆண்டின் நடுப்பகுதி வரையில் சிறிலங்கா அணி பங்குபற்றிய போட்டித் தொடர்களில் 80 வீதமானவை உள்நாட்டிலேயே நடைபெற்றன.

இதில் அவ்வணி சிறப்பாக ஆடி வெற்றிகளைப் பெற்றிருந்ததுடன் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும் உதவியது.

இந்நிலையில், சிறிலங்கா அணியின் தற்போதைய தோல்விகள் என்பது அவ்வணியின் பலவீனத்தையே காட்டுவதாய் உள்ளதென கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.



## அலர்ஜியாகும் அந்நிய மண்

ஏனெனில், சிறிலங்கா அணியின் தற்போதைய தோல்விகள் ஆசிய நாடான இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்கின்றது.

சுழற்பந்து வீச்சின் ஆதிக்கம், சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ளக்கூடிய துடுப்பாட்டம் என சிறிலங்கா அணியில் அங்கம் வகித்த வீரர்கள் அனுபவம் பெற்றவர்களாக இருந்ததுடன் இந்திய அணியின் சவாலை எதிர் கொள்ளத்தக்க வகையிலேயே கடந்த காலப் பெறுபேறுகளும் இருந்தன.

ஆனால், இவை எல்லாவற்றையும் சிதறடிக்கும் வகையிலேயே அவ்வணியின் தற்போதைய தோல்விகள் அமைந்திருப்பதுடன் சிறிலங்கா அணியின் எதிர்காலம் குறித்து கேள்வியை ஏற்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

இந்நிலையில் அந்நிய மண்ணில் சாதித்து தரப்படுத்தலில் முதல் இடத்தை தொடர்ந்து தக்கவைத்திருக்கும் அவுஸ்திரேலிய அணியைப் போன்று அந்நிய மண்ணிலும் சாதிக்க எண்ணும் அணிகள் ஒவ்வொரு நாடுகளின் ஆடுகளத்துக்கு ஏற்றவாறு தங்களைத் தயார்படுத்துவதே அந்நிய மண்ணில் வெற்றிகளைப் பெற ஏதுவாக இருக்கும்.

சுபானந்

# உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

# வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் (நீகோட்)

## நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி

## ஆஅவ கடன் இல:- 2084 - சிறீ (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல் - இல: 64

1. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் (NECORD - Ext) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னால் தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப்பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| BT/NECORD-Ext/HS/01 | மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்தியசாலையில் நான்கு மாடி வெளிநோயாளர் பகுதிக் கட்டடத்தை அமைத்தல். | M3 கட்டடங்கள் | 750,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள் ஆவர்.

   I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

   II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக விளங்க வேண்டும்.

   III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுபத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்

   IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

   V. ஒப்பந்தக்காரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

   VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை **திட்டப்பணிப்பாளர், நீகோட் திட்டம், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில்** பெற்றுக்கொள்ளலாம். **(தொலைபேசி: 026-2227434./பக்ஸ்: 026-2227401.இணையதள முகவரி: www.necord.org ஈமெயில்: necord@sltnet.lk)**

6. கேள்வி ஆவணங்களை 12.12..2005 இலிருந்து 30.12..2005 வரை **காலை 9.30** இலிருந்து **மாலை 3.00மணி** வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா. 5,000/- ஐச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. பொறிவைத்த கேள்விகள் யாவும் **தலைவர், ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச்சபை, "நீகோட்", 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை** என்ற விலாசமிடப்பட்டு **10.01.2006 மாலை 2.30** மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 28.12..2005 ஆந் திகதி அன்று **மாலை 2.30** மணிக்கு நடைபெறும்.

10. சே .விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**சி.ரங்கராஜா**
பிரதம செயலாளர் - வகிமா
தலைவர், ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபை,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம்,
55, கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.

(சி-13604)

# ஊருக்குள் புகுந்தது கடல் அலை
# திருவொற்றியூரில் மக்கள் வெளியேற்றம்

(திருவொற்றியூர்)

திருவொற்றியூரில் புயல் காரணமாக கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு கடல் தண்ணீர் ஊருக்குள் புகுந்தது. மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

வங்கக்கடலில் உருவாகியுள்ள புயல் காரணமாக சென்னைக் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. அலை யின் சீற்றம் அதிகரித்துள்ளது. இதனால் மீனவர்கள் யாரும் மீன்பிடிக்கச் செல்லவில்லை.

திருவொற்றியூரில் இருந்து எண்ணூர் நெட்டுக்குப்பம் வரையுள்ள கடலில் கொந்தளிப்பு அதிகமாக இருந்தது. அலைகள் தடுப்புச்சுவரைத்தாண்டி வீதிவரை வந்து சென்றது.

இதேபோல் சின்னக்குப்பம், பெரிய குப்பம்,எர்ணவூர்குப்பம் ஆகிய இடங்களிலும் கடல் அலைதடுப்புச் சுவரைத்தாண்டிப்பாய்ந்தது.

அன்னை சிவகாமி நகருக்குள் கடல் நீர் 100 மீற்றர் தூரத்திற்குப் புகுந்துள்ளது. தெருக்களில் முழங்கால் அளவுக்கு தண்ணீர் தேங்கியுள்ளது. தொடர்ந்து கடல்நீர் ஊருக்குள் வந்ததால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினார்கள்.

இதேபோல் எண்ணூர் இந்திரா காந்தி குப்பம், தாழங்குப்பம், நெட்டுக்குப்பம் பகுதியிலும் கடல்நீர் 100 மீற்றர் தூரத்திற்கு உள்ளே புகுந்துள்ளது. அங்கு வசித்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கடற்கரையோரம் நிறுத்தபட்டிருந்த படகுகளை மீனவர்கள் வீதிக்குக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளனர்.

இந்தப் பகுதியில் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச்சுவர் உள்ளது. அதையும் தாண்டி அடிக்கடி கடல்நீர் உள்ளே புகுந்து வருகிறது. இதனால் மீனவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

## தீவிர விசாரணை

(நெல்லை)

டில்லியில் கடந்த 16ஆம் திகதி பாராளுமன்றக் கூட்டம் நடந்து கொண்டு இருந்தபோது, சென்னையில் உள்ள அமெரிக்க தூதர் அலுவலகத்துக்கு ஈ-மெயிலில் ஒரு மிரட்டல் கடிதம் சென்றது.

அந்தக் கடிதத்தில் பாராளுமன்றத்தில் வெடிகுண்டு வெடிக்கும் என்றும்,இந்தியா, அமெரிக்காவுக்கு ஆதரவு அளிப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் பின்லேடன் பெயரைக் குறிப்பிட்டு வாழ்த்து கோஷங்களும் அதில் இடம்பெற்று இருந்தது அந்த ஈ-மெயில் கடிதம் நெல்லையில் உள்ள முருகன் குறிச்சியில் இருந்து ஒரு தனியார்தொலைபேசி மூலமாக அனுப்பப்பட்டிருந்தது தெரியவந்தது. இதனையடுத்து இவ்விடயம் தொடர்பாப் பலரை கைது செய்து பொலிசார் தீவிர விசாரணை செய்து வருகின்றனர்.


## "புதிய காலத்தை எதிர் கொள்வோம்"

**ரதன்கலையகம்-கிளிநொச்சி**
**ரதன் கலையகம்-முல்லைத்தீவு**
*ஆகியவற்றின் ஒருமித்த சங்கமிப்பு*

**காலம் :- 21-12-2005 தொடக்கம் 23.12.2005 வரை**
**இடம் :- ரதன்கலையகம் முல்லைத்தீவு**
**தண்ணீரூற்றுச் சந்தி தண்ணீரூற்று**

*பயனுள்ள வகுப்புகள், சிறப்புக்கலந்துரையாடல்கள்*
*புகழ் பெற்ற திரைப்படங்கள் காட்சிப்படுத்தல்*

*உணவு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.*

*ஆதரவாளர்கள் மற்றும் ஆர்வமுடையவர்களை*
*அன்போடு அழைக்கின்றோம்.*

(சி-13575) **நிர்வாகம்.**



## தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி

**ஊடகவியல் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்**



ஊடகவியல் இன்றைய உலகை வனைகின்ற கருவியாகிவிட்டது. ஆனால் தமிழ் ஊடகவியலில் முறைமைசார் ஊடகவியலாளர்களுக்கு மிகுந்த பற்றாக்குறை காணப்படுகின்றது. இதற்குத் தீர்வு காணும் நோக்கிலும், ஆரோக்கியமானதொரு ஊடகச் சூழலை ஏற்படுத்தும் நோக்குடனும் தமிழ் ஊடகவியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கற்கைநெறி வார இறுதி நாட்களில் ஒரு வருடத்துக்கு நடைபெறும். விரிவுரை, செய்முறை, செயல்விளக்கம், களப்பயிற்சி, கள ஆய்வு என்ற ரீதியில் கற்கை இடம்பெறும். கற்பித்தலும், வழிகாட்டலும் நவீன சாதனங்களின் பிரத்தியேகத்துடன் துறைசார் அனுபவர்களால் நடாத்தப்படும்.

முதற்கட்டமாக ஊடகவியல் சான்றிதழ் கற்கைநெறி 2006 இல் ஆரம்பமாகின்றது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:-**
- க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ் பாடத்தில் திறமைச்சித்தி உட்பட சித்தியடைந்திருப்பதுடன் ஊடகவியலில் ஆர்வம்
- ஊடகத்துறையில் பணியாற்றுதல்

**கட்டணம்**
கற்கைநெறிக்கு 6000 ரூபா கட்டணம் அறவிடப்படும். இது மூன்று தவணைகளாகச் செலுத்தப்படலாம்.

**விண்ணப்பத் திகதி.**
அனைத்து விண்ணப்பங்களும் 03.01.2006 இற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக, தமிழ்ஊடக அறிவியல் கல்லூரி, பிரதானசாலை அறிவியல் நகர், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பத்துடன் சுய முகவரியிடப்பட்டு தபால்தலை ஒட்டப்பட்ட 8X4 அளவுள்ள கடித உறையை இணைக்கவும்.

(சி.13607)

**தவிசாளர்,**
**தமிழ் ஊடகஅறிவியல் கல்லூரி,**
**பிரதான தெரு,**
**அறிவியல் நகர், கிளிநொச்சி.**


## 05 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



**கருணாகரன் சசிகரன்**
தலைமைக்காவலர் சசிகரன்
புதிய கொலனி,
மாங்குளம்.
தாயின் மடியில் 18. 04. 1974
தாயக மண்ணில் 20. 12. 2000



**முனீஸ்வரன் குணசீலன்**
தலைமைக்காவலர் குணசீலன்
இரணை இலுப்பங்குளம்,
பரிசங்குளம்.
தாயின் மடியில் 10. 03. 1973
தாயக மண்ணில் 21. 12. 2000

*சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின்போது சாவகச்சேரி, எழுதுமட்டுவாள் பகுதியில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.*



**செல்வம் யோகராசா**
பரிசோதகர் யோகராசா
09ஆம் வட்டாரம், சிதம்புரம் குடியிருப்பு,
மந்துவில், புதுக்குடியிருப்பு.
தாயின் மடியில் 02. 09. 1969
தாயக மண்ணில் 01. 11. 2000

*எழுதுமட்டுவாள் முன்னரங்க நிலையில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தின்போது 2000.11.01 ஆம் நாள் வீரச்சாவடைந்தார்.*

## 10 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



**கணபதிப்பிள்ளை கமலானந்தன்**
உபபரிசோதகர் கமலானந்தன்
இல.58 நெடுங்குளம்வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
தாயின் மடியில் 26. 07. 1946
தாயக மண்ணில் 03. 11. 1993

*யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்தபோது, சிறிலங்கா விமானப்படை விமானத் தாக்குதலின் போது வீரச்சாவடைந்தார்.*

**உரிமைகள் அறுபட உணர்வுகளாய் எழுந்தீரே - தமிழர்**
**உயரிய வாழ்வினை அமைத்திட உரமாகிப் போனீரே - எம்**
**தாயான தாய் நிலமும் தாய் மொழியும்**
**பேயான சிங்களப் பேரினவாதம் ஏப்பமிட்டவேளை**

**காக்கும் கரங்களாய் எழுந்தவர்களே - தலைவன்**
**நோக்கும் திசைவழி வேல்லெனப் பாய்ந்து பகையாடினீர்களே**
**உங்கள் பாதச் சுவட்டினைத் தொடர்கின்றோம் - நாம்**
**எங்கள் நினைவில் உங்கள் கனவைச் சுமக்கின்றோம்**

இந்த மாவீரருக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(7158) **- தமிழீழ காவல்துறையினர்.**

# இன்சமாம் சிறப்புத் துடுப்பாட்டம் இங்கிலாந்துக்கு ஹட்ரிக் தோல்வி

## – தொடரைக் கைப்பற்றியது பாகிஸ்தான்



பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று ராவல்பிண்டியில் நடைபெற்ற நான்காவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 13 ஓட்டங்களால் வெற்றிபெற்று ஒரு நாள் தொடரையும் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் முதலில் துடுப்பாடத் தீர்மானித்தார்.

அந்த அணி 47.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் இன்சமாம் உல்-ஹக் ஆட்டமிழக்காது 81 ஓட்டங்களைப் பெற்று பெறப்பட்ட ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச் சேர்த்தார். இவரைவிட அப்ரிடி 34, மாலிக் 23 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பிளிண்டொப், அண்டர்சன் கபீர் அலி, பிலிக்நெற் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், பிறேக் வெல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

சுலபமான வெற்றியிலக்கை நோக்கி ஆடிய இங்கிலாந்து அணி 48.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 197 ஓட்டங்களை மட்டும் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. துடுப்பாட்டத்தில் பிளிண்டொப் 40,கபீர் அலி ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் அப்ரிடி மூன்று, அக்தர், நபிட் உல்-ஹசன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக இன்சமாம் உல்-ஹக் தெரிவானார். ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் இன்னும் ஒரு போட்டி எஞ்சியுள்ளது. டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் 2-0 என்ற நிலையில் கைப்பற்றியமை தெரிந்ததே.

# ஹர்பஜன்சிங் சூறாவளிப்பந்து வீச்சு; அகமதாபத்தில் தடுமாறுகிறது சிறிலங்கா



அகமதாபாத்தில் நடைபெற்றுவரும் மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஹர்பஜன்சிங்கின் பந்து வீச்சில் சிறிலங்கா அணி தடுமாறி வருகிறது.

அந்த அணி ஆட்டநேர நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக 247 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்கள் என்ற முதல்நாள் ஓட்ட எண்ணிக்கையுடன் தொடர்ந்து ஆடிய இந்தியா லக்ஸ்மனின் சதம், இர்பான் பதானின் 82 ஓட்டங்கள் உதவியுடன் 398 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்து வீச்சில் முரளிதரன், மாலிங்க தலா மூன்று விக்கெட்டுக்களையும், பண்டார,



மஹ்ரூப் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்திய பந்துவீச்சில் ஹர்பஜன்சிங் நான்கு விக்கெட்டுக்களையும், பதான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

துடுப்பாட்டத்தில் அத்தப்பத்து 41, சங்கக்கார 40 அதிக ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.



# பேர்த் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவின் வெற்றி இலக்கு 491

அவுஸ்திரேலிய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் பேர்த்தில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் 491 ஓட்டங்கள் என்ற பிரமாண்ட இலக்கை தென்னாபிரிக்க அணிக்கு அவுஸ்திரேலியா அணி நிர்ணயித்துள்ளது.

முதலாவது இனிங்சில் 258 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்த அவுஸ்திரேலியா தென்னாபிரிக்காவை 296 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியது.

பின்னர் தனது இரண்டாவது இனிங்சை 38 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தொடர்ந்த அவுஸ்திரேலியா கொக்கின் ஆட்டமிழக்காத இரட்டைச் சத உதவியுடன் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 528 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் கொக் 203, குசே 58, பொண்டிங் 53, கில்கிறிஸ் 44 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் லோங் வெல்ட் மூன்று விக்கெட்டுக்களையும், பொலக் இரண்டு விக்கெட்டுக்களையும், நிற்றினி, நெல், கெம் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



வெற்றியிலக்கு நோக்கி ஆடும் தென்னாபிரிக்க அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. வீழ்த்தப்பட்ட விக்கெட்டுக்களை ஷேன் வோர்ன், பிறேக்கன் ஆகியோர் கைப்பற்றினர்.

இந்த ஓட்ட எண்ணிக்கையை எட்டிப்பிடித்து தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றால் அது சாதனை வெற்றியாக அமையும்.

இன்று போட்டியின் இறுதிநாளாகும்.

# மன்னார் மாவட்ட விளையாட்டு வீரர்களுக்கான சீருடை வழங்கல்







சீருடைகளை தமிழீழ தேசிய எழுச்சிப்பேரவை பொறுப்பாளர் உமைநேசன் வழங்குவதை முதலாவது படத்திலும், இரண்டாவது படத்தில் மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ஜான் வழங்குவதையும் காணலாம்.

மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களிற்கான உதைபந்தாட்ட சீருடை வழங்கும் நிகழ்வு மன்னார் கறுக்காய்க்குளம் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இளையோர் செயற்பாட்டு நிறுவன நிதி இணைப்பாளர் கமல் தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை 2.30 மணியளவில் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினரால் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கருத்துரையினை மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் .ஜான் ஆற்றினார். கழகங்களிற்கான சீருடையினை மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ஜான், தமிழீழ தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், தமிழீழ அரும்பொருள் காட்சியகப் பொறுப்பாளர் ஆதித்தவர்மன், மன்னார் மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் வேங்கை, துணைப்படை பயிற்சி ஆசிரியர் காளித் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். இந்நிகழ்வில் முந்நூறிற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். இதேபோல் ஏனைய மாவட்டங்களிலுள்ள விளையாட்டு வீரர்களுக்கும் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினரால் உதைபந்தாட்டச் சீருடைகள் வழங்கப்படவுள்ளன.


# மாவீரர் வெற்றிக்கிண்ண காற்பந்து; லக்கிஸ்ரார், உழவர் ஒன்றிய அணிகள் தகுதி

மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்காக கரைச்சிப் பிரதேச கழகங்களுக்கிடையில் நடைபெற்ற தெரிவு கால்பந்து போட்டியில் லக்கிஸ்ரார், உழவர் ஒன்றிய அணிகள் தெரிவாகின.

நேற்று கிளிநொச்சி மருதநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டங்களில் உழவர் ஒன்றிய அணி சந்திரோதயா அணியையும், லக்கிஸ்ரார் அணி உருத்திரபுரம் அணியையும், தண்ட உதை மூலம் வெற்றி பெற்று கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலக தெரிவு அணிகளுடன் மோதும் தகுதியைப் பெற்றன.

இப்போட்டிகள் எதிர்வரும் 20,21,22 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். மேற்படி போட்டிகளுக்கு புவனேந்திரராஜா, ஜெயக் குமார், சிவனேசன், விக்கினேஸ்வரன், அருள் ஆகியோர் கடமையாற்றினர்.



## சிந்தனைக்கு



எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 20.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# மாணவர்களுக்கு எதிரான...!

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் சிறிலங்கா இராணுவத்தால் நேற்று முன்தினம் இரவு அடித்து நொருக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் மீதும் சிறிலங்கா இராணுவத்தினர் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இதனால் பலர் காயமடைந்துள்ளனர். ஆனால் இத்தகைய தாக்குதல்கள் எதிர்பார்க்கப்படாததொன்றல்ல.

ஏனெனில் கடந்த பல மாதங்களாகவே சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் செயற்பாட்டை முடக்கும் வகையில் சிறிலங்கா இராணுவத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டே வந்துள்ளனர். அடிக்கடி மாணவர் பேரவை அலுவலகத்தை முற்றுகையிட்டதோடு அங்கு சென்றுவந்த மாணவர்கள் மீதும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். பல உந்துருளிகள், ஈருருளிகள் அடித்து நொருக்கவும் பட்டுள்ளன.

இந்த வகையில் கடந்த சில காலங்களாக அடிக்கடி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தை முற்றுகையிடும் முயற்சியில் இராணுவத்தினர் இறங்கிய வேளையில் மாணவரிடையேயும், இராணுவத்தினரிடையேயும் ஏற்பட்ட முறுகல் நிலையால் நிலைமை மோசமடைந்ததுமுண்டு.

இந்நிலையில் புங்குடுதீவில் சிறிலங்கா கடற்படை இளம் பெண் ஒருவரைப் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தி படுகொலை செய்த சம்பவத்தை அடுத்து அங்கு இறுதி நிகழ்வில் கலந்து கொள்ளச் செல்லப்புறப்பட்ட மாணவர் மீது தாக்குதல் நடாத்தியதோடு-அவர்கள் புறப்பட்ட வாகனங்களையும், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தையும் அடித்து நொருக்கியுள்ளனர்.

தமிழ் மாணவர்கள் மீதும், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் மீதும் சிறிலங்காப்படைத்தரப்பு தாக்குதல் நடத்தியதற்கு அண்மைக்காலத்தில் யாழ்.குடாநாட்டில் நிகழ்ந்த பெரும் எழுச்சி நிகழ்வுகளுக்கு இவர்களே காரணம் என எண்ணியிருந்தல் கூடும். அதாவது சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அதன் பின்புலத்தில் இருப்பதாகக் கருதியிருத்தல் கூடும்.

அதில் சில உண்மையும் இருக்கலாம். ஆனால் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் செயற்பாடுகள் வெளிப்படும் முன்னரே யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினால் பொங்கு தமிழ் நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டிருந்தன. அதாவது தமிழ் மக்களின் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெறத் தொடங்கிவிட்டன என்பதே நிதர்சனமாதாகும்.

அத்தோடு யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் பொங்குதமிழ் நிகழ்வுகள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை என்பவற்றின் செயற்பாட்டுடன் தான் தமிழ் மாணவர்கள் உரிமைப்போராட்டத்தில் பங்கேற்கத் தொடங்கியுள்ளார்கள் என்பதல்ல. தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் மாணவர்களின் பங்கு மகத்தானதாகும்.

கடந்த நூற்றாண்டின் எழுபதுகளின் ஆரம்பத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் முன்னணி அரசாங்கம் பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தலை அமுல் செய்த வேளையில் இருந்து போராட்டத்தில் மாணவர்களின் பங்களிப்பு என்பது பெரிதும் முதன்மை பெற்றதாகவே இருந்தது.

அன்று ஆரம்பித்த போராட்டம் சிறிலங்கா இராணுவ அடக்குமுறை, இந்திய இராணுவ அடக்குமுறை என்பவற்கு எதிராகவும் தொடர்ந்ததோடு மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் காத்திரமான பங்கு வகித்தும் வந்தது. இதன் விளைவாக விடுதலைப் போராட்டத்தின் ஓர் அங்கமாக மாணவர் அமைப்புக்கள் இருந்தன.

ஆனால் இம் மாணவர் அமைப்புக்கள் சாத்வீக ரீதியிலான வடிவிலேயே தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்துள்ளன. ஆயுதப்போராட்டத்தில் ஈடுபாடு காட்டியவர்கள் மாணவர் என்ற நிலையில் இருந்து விடுபட்டே போராட்டத்தில் இணைந்து கொண்டனர். இவர்கள் பின்னர் தம்மை மாணவர்களாக அடையாளப்படுத்திக்கொண்டதில்லை.

இந்தவகையில் மாணவர்கள் என்றுமே சாத்வீக முறையில் சனநாயக வழிமுறைகளுக்கு உட்பட்டே தமது போராட்டத்தை நடத்தியுள்ளனர். ஆனால் சிறிலங்கா அரசும், அதன் ஆயுதப் படையினரும் தொடர்ந்து மாணவர்கள் மீதும் அதன் அமைப்புக்கள் மீதும் இராணுவ ரீதியில் தாக்குதலையும் ஒடுக்கு முறையையும் கட்டவிழ்த்துவிட்டவண்ணமே உள்ளன. இத்தகைய நிலையே தற்பொழுதும் ஏற்பட்டுள்ளது.

ஆனால் இந்நிலை தொடருமானால் அதன் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் என்பதைச் சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பு புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் தமிழர் தாயகத்தில் அமைப்பு ரீதியில் அதிக பலம் பெற்ற சக்தியாக உள்ளவர்கள் மாணவர்களே ஆகும். இதனைச் சிங்கள ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளுதல் நல்லது.




# சிங்களப்படையே உன் அடாவடித்தனத்தை நிறுத்து இல்லையெனில் யாழ்.மண் உனது புதைகுழியாகிவிடும்

## - பொங்கியெழும் மக்கள் படை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிங்களப்படைக்கு இது ஓர் எச்சரிக்கை. உன் அடாவடித்தனத்தை நிறுத்து, இல்லையெனில் யாழ். மண் உனது புதைகுழியாகவிடும் என பொங்கி எழும் மக்கள்படை எச்சரிகை விடுத்துள்ளது.

"இது ஓர் எச்சரிக்கை" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள பிரசுரத்தில் பொங்கி எழும் மக்கள் படை தெரிவித்துள்ளதாவது;

சிறிலங்காப்படையே! உன் அட்டகாசத்தை உடன் நிறுத்து, இல்லையேல் நீ பற்றி எரியப்போகிறாய்! கடந்த சில நாட்களாக மக்களது இயல்பு வாழ்க்கையைச் சிதறடித்துப் போர்நிறுத்த உடன்படிக்கையை சிறிலங்கா இனவெறிப்படைகள் அப்பட்டமாக மீறி வருகின்றன சமாதானத்திற்கான பாதை முடங்கி விட்டது.

யாழ். மாவட்டத்தில் இராணுவ ஆக்கிரமிப்பைத் தொடர்ந்தும் தக்க வைத்து, போரினை தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கான தயாரிப்புக்களை சிறிலங்கா அரசாங்கம் தொடக்கிவிட்டது. சிறிலங்காப்படைகளின் சிங்கள, பௌத்த, பேரினவாதப் போக்கு தமிழ் மக்களை கோரமாகப் பலிவாங்கத் தொடங்கி விட்டது என்பதற்கு கடந்த நாள் சம்பவங்கள் சான்றாகின்றன. கிருசாந்தி, ரஜனி, சாரதாம்பாள் பாலியல் படுகொலைகள் வரிசையில் மிருசுவில், வல்லிபுரக்கோவில், தீவகம் அல்லைப்பிட்டிப் பகுதி எனத் தொடர்ந்து நேற்று முன்தினம் புங்குடுதீவில் தர்சினி மீதான பாலியல் கோரச் சம்பவங்கள் நீளுகின்றன.

புங்குடுதீவில் தர்சினியின் நடமாட்டத்தைக் கவனித்த சிறிலங்காக் கடற்படை ஓநாய்கள் அவரை இழுத்துச் சென்று உடலைக் குதறி, மார்பகத்தைச் சிதைத்து கோரமாகப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி கொடூரமாக கொலையைச் செய்து கிணற்றுக்குள் வீசிவிட்டன.

இக்கோரச் செயலுக்கு அமைதி முறையில் கண்டனம் தெரிவித்த மக்கள் மீது துப்பாக்கி கொண்டு சுட்டும், பொல்லுகள் கொண்டு தாக்கியும் தங்கள் அநாகரிகச் செயலை நிறைவேற்றிக் கொண்டனர்.

எங்கும் சுற்றிவளைப்பு, தேடுதல்கள் என தமிழன் ஏறி மிதிக்கப்படுகின்றான். தெருத்தெருவாக, சந்திக்குச் சந்தி இராணுவ அடாவடிக் கும்பல் நிலைகொண்டுவிட்டது. தமிழனின் சுதந்திர நடமாட்டம் கட்டுப்படுத்தப்படுகின்றது. அவனது மண்ணிலேயே அவன் அவமதிக்கப் படுகின்றான்..

சொந்த வீட்டிலும் நிம்மதியாக இருக்கமுடியவில்லை, வேலி பிரித்து வருகின்றான். விபரம் கேட்கின்றான், அடித்துத் துன்புறுத்துகின்றான், கட்டிப்போட்டு இழுத்தும் செல்கின்றான்.

தமிழ்மக்கள் மீது தொடரும் அடாவடித்தனங்களை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு அமைதி ஊர்வலமாக யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் தலைமையில் சென்றோரையும் விட்டுவைக்கவில்லை. யாழ். பல்கலைக்கழக அறிவுஜீவிகள், மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடும், தடியடியும், சப்பாத்துக்கால் உதையும் நடந்தேறின. புண்பட்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள் மருத்துவமனையில் கிடக்கின்றார்கள்.

எங்கும் சிறிலங்காப் படையின் வன்முறையும், அச்சுறுத்தலும், கட்டவிழ்த்து விடப்படுகின்றன. உயர் அறிவு ஜீவிகள் தொடக்கம் சாதாரண விவசாயிகள், தொழிலாளர்கள், பெண்கள், முதியோர், சிறுவர்கள் என எவரையும், பேரினவாத அரச பயங்கர வாதம் கடந்த காலத்தில் விட்டு வைக்கவில்லை. இனியும், நீ விட்டு வைக்கப்போவதும் இல்லை என்பது எமக்குத் தெரியும் அதனால் அராஜகத்தை அடக்க நாம் தயாராகி விட்டோம்.

சிறிலங்கா அரச பயங்கரவாதத்தின் கோரமும் வெளிப்பட்டு விட்டது. சமாதானம் என்ற முகத்திரை கிழிந்து விட்டது. சமாதானம் என்ற கோஷம் வெறும் பம்மாத்து என்பது தெளிவாகி விட்டது.

எமது பெண்கள் நீ கிள்ளி எறியும் பகடக்காய்கள் அல்ல, எமது பெண்கள் புரட்சித்தீயென கனல் கொண்டு விட்டனர்.

தமிழர் தங்களைத் தாங்களே தற்காத்துக்கொள்ளத் தயாராகி விட்டனர், தமிழன் நிமிந்து விட்டான், இனியும் பொறுக்கப்போவதில்லை. பொங்கி எழும் மக்கள் படை தயாராகி விட்டது.

எனவே தான் சிங்களப்படைக்கு இது ஓர் எச்சரிக்கை. உன் அடாவடித்தனத்தை நிறுத்து. இல்லையெனில் யாழ். மண் உனது புதைகுழியாகி விடும். அழிக்கப்படுவாய்!

# துயிலுமில்லத்தில் காவலாளியைத்தாக்கிவிட்டு படையினர் தேடுதல் நடத்தியமை போர்நிறுத்த மீறல்

## - யாழ். மாவட்ட அரசியல்துறை க.கா குழுவுக்கு மகஜர்

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தினுள் புகுந்த இராணுவத்தினர் காவலாளியைத் தாக்கிவிட்டு தேடுதல் நடத்திய சம்பவமானது போர்நிறுத்த மீறலாகும் என்பதுடன் மாவீரர் சதுக்கத்தினையும் அவமதிக்கும் செயலாகவும் உள்ளது. இராணுவத்தினரது இந்நடவடிக்கையால் பொது மக்கள் மிகவும் ஆத்திரமடைந்து கொந்தளிக்கும் நிலையில் உள்ளனர். எனவே, இராணுவத்தினர் யாழ். மாவட்டத்தில் உள்ள மக்களால் பெரிதும் மதிக்கப்படுகின்ற அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் இவ்வாறு நடந்து கொள்வதை தவிர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என யாழ். மாவட்ட அரசியல்துறை யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் சமர்ப்பித்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளது;

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தினுள் ஆயுத சகிதம் சுமார் 25 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் உட்புகுந்து அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த . "ஈகிள் பாதுகாப்புச் சேவை" பிரிவைச் சார்ந்த பாலச்சந்திரன் என்பவரை தாக்கி விட்டு அவரை அச்சுறுத்தும் வகையில் கடுமையான விசாரணையினை மேற்கொண்டுள்ளனர். அவ்வேளையில் அங்கு ஒருபகுதி இராணுவத்தினர் மாவீரர் சமாதிகள் அமைந்துள்ள பகுதிகள் மற்றும் அலுவலகம் அமைந்துள்ள பகுதிகள் என்பவற்றைச் சல்லடை போட்டுத தேடுதல் நடத்தியுள்ளார்கள்.பின்னர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த மேற்படி உத்தியோகத்தரை உடன் அவ்விடத்தைவிட்டுச் செல்லுமாறு அடித்துத்துரத்தியுள்ளனர். அவ்வேளை அவர் தமது ஈருருளியினை எடுத்துக் கொண்டு வெளியே செல்ல முற்பட்ட போது மீண்டும் ஈருருளியுடன் சேர்த்து அவரை இராணுவத்தினர் தாக்கியுள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-படையினரின் அடாவடியை நிறுத்த உடன் நடவடிக்கை-

# யாழ்.மாவட்ட அரசியல்துறை கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

அமைதி வழியிலான ஊர்வலத்தில் கலந்து கொண்ட புத்திஜீவிகள் மீதுசிறிலங்காப் படையினர் மேற் கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் செயற்பாடானது போர் நிறுத்த மீறலாகும் என்பதுடன் அராஜக நடவடிக்கையும் ஆகும். இவ் அடா வடித்தனங்களை உடனடியாக நிறுத் துவதற்கு ஆக்க பூர்வமான நட வடிக்கைகளை மிக விரைவில் மேற் கொள்ள வேண்டுமென யாழ். மாவட்ட அரசியல் துறையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் கோரியுள்ளனர்.

அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

நேற்றுக்காலை 09.45 மணியளவில் பல்கலைக்கழக உபவேந்தர் தலைமையிலான அமைதி வழியிலான ஊர்வலத்தில் மாணவர்கள், பேராசிரியர்கள், மற்றும் தனிநபர்கள் ஆகியோர் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது அவர்களை நோக்கிச் சிறிலங்காப்படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தினையும், தடியடிப் பிரயோகத்தினையும் நடத்தினர். இத்தாக்குதலில் சிரேஷ்ட விரிவுரையாளர் பேரின்பநாதன், பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் காண்டீபன் ஆகியவர்கள் இராணுவத்தினது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சிவச்சந்திரன் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் தடிகளாலும், பொல்லுகளாலும், துப்பாக்கிப் பிடிகளாலும், தாக்கப்பட்டு காயங்களுக்கு உள்ளாக்கியுள்ளனர். அதனைத் தொடர்ந்து அங்கு நின்ற பல்கலைக்கழக சமூகத்தினரை விரட்டும் நோக்குடன் மின்கம்பங்களை நோக்கி துப்பாக்கிகளினால் சுட்டும் உள்ளனர் என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அன்ரன் பாலசிங்கம்-எரிக் இன்று சந்தித்துப் பேச்சு

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை இலங்கைக்கான நோர்வே நாட்டின் சிறப்புத்தூதுவரும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிக்சூல்ஹெய்ம் இன்று லண்டனில் சந்தித்துப் பேசுகிறார்.

பெல்ஜியத்தின் தலைநகரான பிரசெல்சில் நடைபெறுகிற இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்திலும் எரிக்சூல்ஹெய்ம் பங்கேற்கிறார். இந்தக் கூட்டத்தில் நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன. கடந்த நான்கு ஆண்டுகால சமாதான காலத்தில் தொடர்ந்து நீடிக்கும் வன்முறைகள் தொடர்பாகவும் சமாதான முயற்சிகளை மீள முன்னெடுப்பது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் பேச்சுக்களை நோர்வே தலைநகரில் நடத்த வேண்டும் என்று தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் சர்வதேச சமூகத்துடனான விடுதலைப்புலிகளினது உறவைத் துண்டிக்கும் வகையில் ஆசிய நாடு ஒன்றில் பேச்சுக்களை நடத்தலாம் என்று சிறிலங்கா அரசாங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது.

# தமிழ்ச்செல்வன்-மனோகணேசன் 22 ஆம் திகதி சந்தித்துப்பேச்சு

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை மேலக மக்கள் முன்னணித்தலைவர் மனோ கணேசன் எதிர்வரும் 22ஆம் திகதி சந்தித்துப்பேசவுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச்செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று வேலைநிறுத்தப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகச் சமூகம் சிறிலங்காப்படையினரால் மிகவும் மிலேச்சத்தனமானமுறையில் தாக்கப்பட்டதைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழகம் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக யாழ்.பல்கலைக் கழக சமூகம் அறிவித்துள்ளது.

நேற்று சிறிலங்காப்படையினரால் பல்கலைக்கழக பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஊழியர்கள் தாக்கப்பட்டமையடுத்து மாலை 5.30 மணிக்கு பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பின் போதே இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

அமைதியாக அகிம்சை வழியில் பேரணியில் ஈடுபட்டுள்ள பல்கலைக் கழக துணைவேந்தர், பீடாதிபதிகள் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் சிறிலங்காப் படைகளால் வெறித்தனமாக தாக்கப்பட்டதற்கு பல்கலைக்கழக சமூகம் வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

க.பொ.த.(சா/த)பரீட்சை நடத்தப்பட்டுக்கொண்டிருப்பதால் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு தடைகள் எதுவும் ஏற்படாதவாறு பல்கலை வளாகத்தில் மட்டுமே தாம் இவ் எதிர்ப்பு நடவடிக்கையாக பல் கலைக் கழகத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் இடைநிறுத்தப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் துணைவேந்தர், பாராளுமன்ற உறுப்பினர் மாணவர் பிரதிநிதிகள், ஊழியர்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(கி)

# தர்சினி பாலியல்வல்லுறவுக்குட்டுத்தப்பட்டார் மருத்துவ அறிக்கையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மடத்துவெளியில் உள்ள கடற்படை முகாமுக்கருகில் உள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட தர்சினி என்பவர் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப் பட்டே கொலை செய்யப்பட்டுள்ளார் என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வழமை போல தனது பெரியதாயார் வீட்டுக்குப்போவதாகக்கூறிச் சென்ற இளையதம்பி தர்சினி (வயது-20) என்ற இளம் பெண் காணாமல்போன நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

இந்த நிலையில் இளம் பெண்ணின் சடலம் மீதான பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கழுத்து நெரிக்கப்பட்டே இவர் கொலை செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்தச்சம்பவம் தொடர்பான விசாரணை கொழும்பில் உள்ள புலனாய்வுப்பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

# பல்கலைக்கழகத்தைச்சுற்றி படைக்குவிப்பு தீவிரம்

(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பேரணிமீது சிறிலங்கா இராணுவத்தினர் புரிந்த வன்முறையை யடுத்து யாழ். பல்கலைக்கழக வளாகத்தைச் சுற்றி சுமார் நானூறிற் கும் மேற்பட்ட சிறிலங்கா படையினர் குவிக்கப்பட்டிருப்பதாக பல்கலைக் கழக வளாகத்திலிருந்து எமது செய்தியாளர் அறிவிக்கிறார்.

நேற்று இரவு எட்டு மணியிலிருந்து இவ் இராணுவக் குவிப்பு இடம் பெற்றிருப்பதாக அவர் அறிவிக்கிறார். கந்தர் மடம், கலட்டிச்சந்தி, நெல்வேலி பகுதிகள் இராணுவமயமாக காணப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

(28)



முச்சக்கரவண்டிச் சாரதிகள் மீதான இராணுவ அடாவடியைக் கண்டித்து யாழ். போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு அலுவலகம் முன் முச்சக்கரவண்டிச் சாரதிகள் திரண்டுள்ளமையைப் படத்தில் காணலாம். (படம்- ஆன்சிமீன்)

## படையினரின்..

ளைக் காண்பித்த பின்பும் இவர்களை இராணுவம் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியுள்ளது.

இதில் தினக்குரல் செய்தியாளர் ஆ.சபேஸ்வரன், நமது ஈழநாடு செய்தியாளர் ஜெ.ஜெராட், உதயன் செய்தியாளர் பிரதீபன், தினகரன் செய்தியாளர் வின்சன்ஜெயன் ஆகியோரே படையினரது தாக்குதல்களில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளவர்களாவர். (33.27.28..கி)

## யாழ்.பல்கலை...

உள்ள கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

அரைமணி நேரம் இடம்பெற்ற இச் சந்திப்பில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சு.மோகனதாஸ், பல்கலைக்கழக விவசாயப் பீடம், மருத்துவ பீடம் ஆகியவற்றின் மாணவத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர் சங்கத் தலைவர் பல்கலைக்கழக நிதிக் கிளைத்தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பு நடந்துகொண்டிருந்தவேளையில் யாழ். அரச அதிபர் கணேஷ் அங்கு சமுகம் கொடுத்திருந்தார்.

கண்காணிப்புக் குழுவினருடனான சந்திப்பின்போது படையினர் மாணவர்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்களுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.(செ)

## அமைதிப்...

றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு நடத்திய இப்பேரணி யாழ். பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ஆரம்பித்து பரமேஸ்வராச்சந்தியூடாக கோவில் வீதியில் உள்ள இலங்கை யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் மகஜர் கையளிப்புடன் நிறைவடைய இருந்தது.

இந்நிலையில் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ஒலிபெருக்கி வாகனங்கள் சகிதம் நகர்ந்த இப் பேரணி பரமேஸ்வராச்சந்தியை அடைந்தபோது அங்கு வந்த இராணுவம் மாணவர்களைத் தொடர்ந்து செல்லவிடாது துப்பாக்கி முனையில் தடுத்தது.

எனினும் இந்தப் போராட்டத்தின் தன்மைகள். அதில் உள்ள அகிம்சை வழி உரிமைகள், தார்ப்பரியங்கள் என்பவற்றை படையினருக்கு எடுத்து விளக்கிய துணைவேந்தர் தன்மைத் தொடர்ந்து செல்ல வழிவிடும்படி கோரினார்.

எனினும் துணைவேந்தரது கோரிக்கைகளை ஏற்கமறுத்த இராணுவம் அவரையும், அவருடன் இப் பேரணியில் கலந்திருந்த ஏனையோர் மீதும் கண் மூடித்தனமான தாக்குதலை மேற்கொள்ளத்தொடங்கியது இத்தாக்குதலுக்கு பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர், விரிவுரை யாளர் உட்பட மாணவர்களும் இலக்கானர் அத்தோடு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனும் உள்ளானார்.

இத் தாக்குதலின் போது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதோடு தடிகள், பொல்லுகள் துப்பாக்கிப்பிடி போன்றவற்றாலும் தாக்குதல் நடத்தப்பட்டன. இத்தாக்குதலில் ஒரு பேராசிரியர், ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர், மாணவர் தலைவர் உட்படப் பலர் படுகாயம் அடைந்தனர். இதில் காயமடைந்த ஐம்பதிற்கும் மேற்பட்டோரில் 14 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க அப்பகுதியில் கொண்டுவந்து குவிக்கப்பட்ட இராணுவம் பரமேஸ்வராச் சந்தியூடாகச் செல்லும் பலாலி வீதியின் திருநெல்வேலிச்சந்தி தொடக்கம் கந்தர் மடச்சந்தி வரையான பகுதியை தமது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து வீதிப்போக்குவரத்தையும் தடை செய்து பொது மக்கள் மீதும் தாக்குதல் நடத்தியது.

எனினும் மாணவர்கள் பொறுமையுடன் நடந்துகொண்டதால் தொடர்ந்து வன்முறைகள் ஏதும் இடம்பெறவில்லை. எனினும் படையினர் விலகவில்லை.

இந்நிலையில் சம்பவ இடத்துக்கு கண்காணிப்புக் குழு வருகை தர இருந்தபோதும் படையினரது தாக்குதல்களால் சம்பவ இடத்தை நெருங்கமுடியாது அவர்கள் திரும்பிச் சென்றனர். (33,28,27,கி)

## அரசாங்கமும்...

கிக்கலைத்தனர். நாங்கள் பரமேஸ்வராச் சந்தியை அடைந்த போது துப்பாக்கிச்சூடு நடத்தினர் நான் முதலில் எழும்பி மாணவர்களைத் தாக்க வேண்டாம் என்று கூறினேன். மாணவர்கள் காயம் அடைந்தனர். எனவே நான் மாணவர்களைக்கலைந்து செல்லுமாறு கூற மாணவர்கள் கலைந்து சென்றனர்.

ஏனெனில் மாணவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் சமூகம் தாங்காது.

இதன் பின்னர் எங்களுடன் வந்த முச்சக்கரவண்டிகள் இரண்டும் அடித்து நொருக்கப்பட்டன. நாட்டைப் பாதுகாக்க என வந்தவர்கள் மிக மோசமாக இந்தத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இது திட்டமிட்ட அரசியல் ரீதியான இராணுவத் தாக்குதல் எமது அனுபவத்தில் அமைதியாக நடத்தப்பட்ட பேரணி மீது நடாத்தப்பட்ட முதலாவது இராணுவ ஒடுக்குமுறை இது. இந்தத் தாக்குதலுக்கு புதிய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் புதிய யாழ். மாவட்ட இராணுவத்தளபதி சந்திரசிறியும்தான் பொறுப்பு:-

கொழும்பிலே புதிய அரசாங்கம் பொறுப் பேற் றுள்ளவர்களின் வழிகாட்டுதலுடன் மாணவர்கள் மீது இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழக சூழலிலிருந்து சிறிலங்கா இராணுவம் முற்றாக வெளியேற்றப்பட்டு இங்கே அமைதியான சூழல் நீடிக்க அனுமதிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.